அரசு ஊழியர்

மாத இதழ்

2023 ஜூலை

மலர்:44 இதழ்:07

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஆசிரியர் குழு:
மு.அன்பரசு, மு.பாஸ்கரன்,
தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன்,
கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி,
சா.டானியல் ஜெயசிங்,
சா.கோதண்டபாணி, அ.குபேரன்

வரைகலை: கார்ட்டுன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி



முகவரி:

பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com



அச்சகம்:

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200
தனி இதழ் : ரூ.20



இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளே...


1. **வரலாற்றுக் கடமையை நிறைவேற்றி வருங்காலத்தை வளமையானதாக்குவோம்!** *தலைவர் மடல் ......................... 4*

2. **உரிமை மீட்புக்கான போராட்டக் கனலோடு மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் ஒன்று கூடுவோம்!** *பொதுச் செயலாளர் மேசையிலிருந்து......................... 7*

3. **உயர்வானதொரு லட்சியம் உங்களின் பங்களிப்பினால் வெல்வது நிச்சயம்!** ......................... *9*

4. **சிவப்புச் சூரியன் ஜோதிபாசு** .......... *11*

5. **எழுச்சி நாளின் இருபதாம் ஆண்டு நிறைவு** ......................... *13*

6. **ஆளுநர் அவராகவே வெளியேறுவது நல்லது** .................. *17*

7. **ஒவ்வொரு வர்க்கப் போராட்டமும் ஓர் அரசியல் போராட்டமே!**............ *19*

8. **தேசிய கல்விக் கொள்கையும் - பாதக விளைவும்** ...................... *21*

9. **மாணிக்க ஆண்டின் மங்கா நினைவுகளும் எழுச்சி நாள் கூட்டத்தின் புரட்சி நிகழ்வுகளும்!**............................... *28*

10. **திரிபுராவில் பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்பு** .................. *25*

11. **இந்திய ரயில்வேயின் சீர்குலைவுக்கு காரணம் ஒன்றிய அரசின் உச்சக்கட்ட அலட்சியமே!** ............................ *26*

12. **வரலாற்றுப் படையின் 40 ஆம் மாணிக்க ஆண்டும், 2003 ஜூலை 2 எழுச்சி நாள் 20 ஆம் ஆண்டு நிறைவும்.** ............................... *28*

13. **அன்பால் அல்ல அனுபவத்தால் மட்டுமே புரிந்துகொள்ளக் கூடியவர் அப்பா!** ................................. *31*

14. **வங்கித் துறையை தனியார் மயமாக்கும் நடவடிக்கை** ............. *32*

# வரலாற்றுக் கடமையை நிறைவேற்றி வருங்காலத்தை வளமையானதாக்குவோம்!

கீழடி அகழ்வாராய்ச்சியில் கிடைத்துக்கொண்டிருக்கக் கூடிய பொருட்களும் கட்டமைப்புகளும் நம் முன்னோடித் தமிழன் உலகத்திலேயே மிகச்சிறந்த நாகரீகத்தோடு வாழ்ந்திருக்கிறான் என்பதை உலகுக்கு பறைசாற்றி வருகிறது. அகழ்வாராய்ச்சி இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதைப்போலவே நம்முடைய அரசு ஊழியர் இயக்கத்தை தோழர்.எம்.ஆர்.அப்பனும் அவருடன் இருந்த முன்னோடித் தோழர்களும் உருவாக்கிய போது அவர்களுக்குள் என்ன எனன இலட்சியங்கள் இருந்திருக்கும் என்பதை நாம் அகழ்வாராய்ச்சி செய்ய வேண்டிய கட்டாய காலத்தில் இருக்கிறோம்.

சங்கக் கட்டமைப்பு என்பது சாதாரண விஷயமல்ல. அது காலந்தொட்டு நீடித்திருக்க வேண்டும் என்றால் அதற்கான வலிமையான அடித்தளம் அமைக்கப்பட்டிக்க வேண்டும். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தைப் பொறுத்த வரைக்கும் தோழர் எம்.ஆர்.ஏ.சிறந்த அடித்தளத்தை அமைத்துக்கொடுத்து அடுத்து வரும் அரசு ஊழியர் சந்ததிக்கு தங்களுக்கான உரிமைகளை தகவமைத்துகொள்ளவும் தக்க வைத்துக் கொள்ளவுமான பயிற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளார். அவரைப் பின்தொடர்ந்து வந்த முன்னோடித் தோழர்களும் சங்கத்தை அதற்கென உள்ள தனிப்பெருமைகளோடு நடத்தி சிறப்பு சேர்த்து வந்துள்ளனர்.

ஆனால் இந்த முன்னோடித் தோழர்களின் கனவு, அரசு ஊழியர் இயக்கத்தை கட்டமைத்து ஒரு கட்டிடத்தை கட்டி முடித்து ஒவ்வொரு உரிமைக்கும் போராட்டம் நடத்தி உரிமைகளை நிலை நிறுத்துவதற்கான அமைப்பாக மட்டுமே இருந்திருக்குமா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது. அரசாங்கங்கள் தொடர்ந்து ஊழியர்களின் உரிமைகளை பறிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், ஊழியர்கள் தங்களது பறிக்கப்பட்ட உரிமைகளுக்காக போராடுவதும் பலகட்டப் போராட்டங்களுக்குப் பிறகு அரசாங்கங்கள் ஏதோ சில கோரிக்கைகளை மட்டும் நிறைவேற்றி விட்டு அரசு ஊழியர்களைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவதும் தொடர் நிகழ்வுகளாக இருக்கும் நிலை பற்றி அவர்கள் யோசித்திருக்க மாட்டார்களா? என்றால் நிச்சயம் யோசித்திருப்பார்கள். அரசு ஊழியர்கள் தொடர்ந்து போராட்டங்கள் நடத்துவதும், அரசு, போராட்டங்களின் வீரியங்களைக் கண்டு பேச்சு வார்த்தைக்கு அழைப்பதும் அல்லது தன்னுடைய நடவடிக்கைகளை பொதுமக்களிடம் சொல்லி அரசு ஊழியர் சமுதாயத்தைக் கொச்சைப் படுத்தும் நடவடிக்கைகளில் அரசாங்கங்கள் ஈடுபடுவதும், ஊழியர்கள் போராடிச் சிறை செல்வதும், என்னதான் நடந்தாலும் எங்களுடைய முடிவில் மாற்றமில்லை என்ற நிலையில் அரசாங்கங்கள் முரண்டு பிடிக்கும் போது அதற்கு தாக்குபிடிக்க முடியாமல் நமமுடைய தோழர்களில் பலபேர் போராட்டக் களங்களிலிருந்து விலகிச்சென்று விடுவதையும் நாம் காண்கிறோம். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அந்த நாட்களிலேயே நம் முன்னோடித் தோழர்கள் இயக்கத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல அனைத்து ஊழியர்களுக்கும் தொழிசங்க ரீதியான பயிற்சிகளை அளிப்பதன் மூலம் எத்தகைய இடியானாலும், எத்தகைய மழையானாலும், எத்தகைய வெயிலானாலும் கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டக் களத்திலிருந்து இம்மியளவும் நகராத உறுதியான மனங்களை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார்கள். ஆனால் ஊழியர்களுக்கு தொழிற்சங்க ரீதியிலான

பயிற்சிப் பட்டறை தேவை என்பது அவர்களுடைய கனவாக இருந்திருக்கும் என்பது நிச்சயம்.

உலகமயம் செயல்பாட்டுக்கு வந்த பிறகு அரசாங்கங்கள் அரசு ஊழியர்களின் உரிமைகளை தொடர்ந்து பறித்து வருகின்றன. அதனால் இன்றைய போராட்டங்கள் இழந்த உரிமைகளை மீட்கவும் கௌரவமான வாழ்வாதாரத்தை நிலைநிறுத்துவதற்கான போராட்டங்களாக திசைமாறியுள்ளன.

கோடையின் மதியத்து வெயில் வெளியே கொளுத்திக் கொண்டிருக்கையிலும், தோப்புக்குள்ளே ஒரு குயில் தனித்துப் பாடிக் கொண்டு தான் இருக்கிறது. முழுப் பாறைகளும் வெளித்தெரிய ஆறு வறண்டு மெல்லிய கோடாகியிருந்தாலும், கலங்கிய சேற்றுக்குள் மீன்கள் குடும்பம் நடத்திக் கொண்டு தான் இருக்கின்றன. வானத்து நீலம் தெளிந்து விரிந்திருந்தாலும், பறவைகள் வானில் சென்று கொண்டு தான் இருக்கின்றன. பசுமை காய்ந்து பழுப்பு என்றாகி புற்கள் உலர்ந்திருந்தாலும், மாடுகள் அசை போட்டுக் கொண்டு தான் இருக்கின்றன. ஆனால் இன்று நம்முடைய அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் பலபேர் தங்களுடைய வேலை பறிபோய்விடுமோ என்கிற பயத்தில் போராட்ட களம் வராமலும் உரிமைகளுக்காக குரல் எழுப்பமால் ஊமையாக இருந்து விடுவதும் சங்கத்துகாரர்கள் எப்படியாவது போராடி உரிமைகளை பெற்றுத் தந்து விடுவார்கள் என்ற நினைப்பில் இருந்து விடுவதும்தான் இயல்பாக மாறி வருகிறது. நிகழ்காலம் நஞ்சுக் கலத்தைக் கவிழ்த்துத் திணித்தாலும், கடந்த நாட்களின் இனிப்பு இன்னும் அடிநாக்கில் ஒட்டிக் கொண்டு தான் இருக்கின்றது. நொடிகள் வாளெடுத்து வீசித் தசைகளை வெட்டினாலும், சொட்டும் குருதித்துளிகள் மறக்காத பொழுதுகளை மண்ணில் ஊற வைக்கத்தான் செய்கின்றன. அந்த கால கட்டத்தில் அனைவரும் ஒன்று திரண்டு போராட்டம் நடத்தியதும் அரசாங்கங்கள் தலைவர்களை அழைத்து அவர்களுடைய கோரிக்கைகளை செவிமடுத்து அவற்றில் உள்ள நியாயங்களை உணர்ந்து கோரிக்கைகளை நிறைவேற்றியதும் அபூர்வ நிகழ்வுகளாகியுள்ளன. இப்போது அந்த நிலைமை தலைகீழாக மாறியுள்ள நிலையில், தங்களுக்கு கிடைத்தது போதும் என்ற இயலாமையிலும், என்னதான் போராடினாலும் அரசாங்கம் நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்ற மாட்டார்கள் என்ற அவநம்பிக்கையிலும் ஊழியர்கள் வீழ்ந்து கிடக்கிறார்கள் இவர்களை தட்டியெழுப்பிடவும் நம்முடைய முன்னோடித் தலைவர்களின் லட்சியங்களை செய்து முடிக்கவும் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் தங்களுடைய உரிமைகயை தக்கவைத்துக் கொள்ளக்கூடிய போராட்ட வலிமையையும் மனஉறுதியையும் அளிக்க வல்ல பயிற்சி மையத்தை ஏற்படுத்தும் முயற்சியில் நாம் இறங்கியுள்ளோம்.

இந்த இயக்கம் அரசு ஊழியர்களுக்கு அரசாங்கங்கள் தரவேண்டிய உரிமைகளை போராடிப் பெறுவதற்காகவும், பெற்ற உரிமைகளை விட்டுவிடாமல் காப்பதற்காகவும் தோன்றிய இயக்கம்தான் என்றாலும் நாளடைவில் இது மக்களின் பிரச்னைகளுக்காக குரல் கொடுக்கும் இயக்கமாகவும் சமூக நீதி, மகளிர் உரிமை, மாணவர் கல்வி, தொழிலாளர்கள், விவசாயிகளின் உரிமைகள் போன்ற சமத்துவ சமுதாயத்தை படைப்பதற்கு இடையூறாக இருக்கும் தீய சக்திகளை வேரறுக்கும் இயக்கமாக மாறி பல போராட்டங்களை, கண்டன ஆர்ப்பாட்டங்களை, கருத்தரங்கங்களை நடத்தி அரசு ஊழியர்களிடமும் மக்களிடமும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் இயக்கமாக உள்ளது. சம்பளத்துக்காக, போனசுக்காக, ஊதிய மாற்றத்துக்காக மட்டும் போராடும் இயக்கமல்ல அரசு ஊழியர் இயக்கம் என்பதை அரசாங்கமும், அரசியல் கட்சிகளும் புரிந்து கொண்ட பின் அரசு ஊழியர்கள் மீதான அபிப்பிராயங்கள் மக்களிடம் மட்டுமல்ல ஆட்சியாளர்களிடமும் மாறியது. இந்த இயக்கத்தின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்ட சமூக ஆர்வலர்களும், தோழமை இயக்கங்களும், அரசியல் கட்சியினரும் நம்முடைய இயக்கத்தின் வளர்ச்சி இந்த சமுதாயத்திற்கு இன்றியமையாதது என்பதை உணர்ந்தனர். நமது இயக்கத்தின் முதற்கட்ட முன்னோடித் தோழர்கள், கொட்டி வைத்த செங்கற்களாய் இருந்த தமிழ்நாடு அரசு

ஊழியர் சங்கத்தை கட்டி முடித்த கட்டிடமாக மாற்றி மாபெரும் வரலாற்றுக் கனவை மெய்ப்பட வைத்துள்ளனர். அந்த கட்டிடத்தில் இருந்து கொண்டுதான் இந்த இயக்கம் எந்தவித அச்சுறுத்தலுக்கும் அஞ்சாமல் நூற்றுக்கணக்கான இயக்கங்களை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது. இவற்றில் அரசு ஊழியர்களின் நலன்களுக்கான போராட்டங்களுக்கு இணையாக சமூக அக்கறை சார்ந்த இயக்கங்களை நமது சங்கம் தொடர்ந்து செய்து வந்து கொண்டிருக்கிறது. இந்த இயக்கங்களை தொடர்ந்து நடத்திட அரசு ஊழியர்களுக்கு தொழிற்சங்கப் பயிற்சி மிகவும் இன்றியமையாத ஒன்று என்பதால் அதற்கான பயிற்சி மையத்தை நிறுவுவதற்கான ஆயத்தப் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

நாம் வாங்கியுள்ள இடத்தில் பயிற்சி மையத்தை கட்டிடும் விதமாக ஜுலை 2ஆம் நாள் நம்முடைய பயிற்சி மையம் எழும்பவுள்ள இடத்தில் நடைபெற்ற எழுச்சிநாள் கூட்டத்தில் போராட்ட அறிவிப்போடு நிதி திரட்டுவதற்கான ஏற்பாடுகளும் திட்டமிடப்பட்டிருக்கின்றன. 2003ஆம் ஆண்டு ஜூலை 2ஆம் நாள் ஒரே அரசாணையில் 1,76,000 பேரை டிஸ்மிஸ் செய்த செல்வி ஜெயலலிதா அவர்களின் அராஜக் போக்கை கண்டித்து அதை நினைவு கூறும் விதமாக நடத்தப்பட்ட இந்த எழுச்சி நாள் கூட்டத்தில் மேற்படி அரசாணையை செல்லாததாக்கி 1,76,000 அரசு உழியர்களும் மீளப் பணியமர்த்தப்பட்ட நாளான ஜூலை 24ஆம் நாளில், நம்முடைய நிலுவை கோரிக்கைகளை, அவற்றை நிறைவேற்றுவதாக கூறி ஆட்சிக்கட்டிலில் அமர்ந்துள்ள முதல்வரின் கண்டும்காணா போக்கை கண்டிக்கும் விதமாக மாவட்டத் தலைவநகரங்களில் கோரிக்கை பேரணி நடத்தி நம்முடைய ஒற்றுமையையும் உறுதிப்பாட்டையும் அழுத்தம் திருத்தமாக இந்த அரசுக்கு எடுத்து வைப்போம் வாருங்கள்.

நம்முடைய முன்னோடித் தோழர்கள் அவர்களுக்காக பாடுபடவில்லை நமக்காகத்தான் இரவு பகலாக இன்னல்களை தாங்கியுள்ளனர். தோழர் சேகுவாரோ சொன்னது போல நான் வீழ்ந்து விட்டால் என்னுடைய துப்பாக்கியை என் பின்னால் வரும் தோழன் ஏந்திக் கொள்வான் என்று சொன்ன வார்த்தைகளைப் போல நம் முன்னோடித் தோழர்கள் நமக்காக விட்டுச் சென்றுள்ள கடமைகளை நிறைவேற்றுவதில் நமக்குள்ள வரலாற்றுக் கடமையை நாம் செவ்வனே முடித்து இந்த இயக்கத்தை இன்னும் உயிர்த்துடிப்பானதாக மாற்றிடுவோம் வாருங்கள்.

மதியுடைமையும் வலியுடைமையும்
துணிவுடைமையும்
சுகபோகப் போர்வைக்குள் புகுந்தால்
முயலாமையும் இயலாமையும்
துணியாமையின் தோளேறித்
தோல்வி இலக்கினைத் தொட்டுவிடும்!
புத்தம்புது வெற்றிகளுக்காக மட்டுமல்ல
பெற்ற வெற்றிகளைத் தக்கவைக்கவும்
தொடர்ந்து விழித்திருந்து வினையாற்றுவோம்!!

●

## சூடா ஒரு கோப்பை சூப்

### வாழ்ந்து காட்டிட வா!!

துளித் துளியாய்
நம்மை நாம்
சேர்த்துச் சேர்த்து
தீப்பிழம்பென
மீண்டெழுவோம் வா;

`வீழ்வது மரணம்'
அது எல்லோராலும் இயலும்
`வாழ்வதே நீ`;
அது உன்னால்
மட்டுமே முடியும்;
வாழ்ந்து காட்டிட வா!!

- வித்யாசாகர்

# உரிமை மீட்புக்கான போராட்டக் கனலோடு மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் ஒன்று கூடுவோம்!

*பூக்களின் மென்மை*
*போதவில்லை,*
*பசுமை பத்தவில்லை,*
*மலைகளின் எழிலும்*
*மனநிறைவில்லை.*

*நதிகளின்*
*நெளிவு சுளிவிலும்*
*நயம்படவில்லை,*
*புயலின் வேகமும்*
*புலப்படவில்லை,*

*தீயின் பயனிலும்*
*திருப்தியில்லை,*
*நீரின் தாகம்*
*நிறைவில்லை...!*

என்று நீளும் கவிதைதான் இப்போது நினைவுக்கு வருகிறது.தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற ஆலமரத்திற்கு இப்போது வயது 40. இந்த நாற்பது ஆண்டு காலத்தில் நம் முன்னோடித் தோழர்கள் போராடிப் பெற்றுத்தந்த பல உரிமைகளை நாம் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வந்திருக்கிறோம். நாம் சிறப்பாகத்தான் செயல்படுகிறோம், செம்மையாகவே போராடுகிறோம். ஆனாலும் இழந்த பத்து உரிமைகளில் ஒன்றிரண்டைத்தான் நாம் மீட்க முடிகிறது. இதற்கு காரணம் என்ன? நாம் உறுதி மிக்க குழுவாக இருந்து மட்டும் பயனில்லை வலிமை மிக்க அணியாக மாற வேண்டும். ஆக நம்முடைய செயல்பாடுகள் சிறப்பானவையாக இருந்தாலும் வெற்றி என்ற கனி நம் கைகளில் கிடைத்தால்தான் முழு நிறைவை நாம் பெற முடியும்.

இந்த 40 ஆண்டு காலத்தில் அரசாங்கங்களின் நடவடிக்கைகளும் அதை நம் ஊழியர்கள் எதிர்கொண்டு போராடி வெற்றி பெற்ற விதங்களும் நம்முடைய நாளைய போராட்டங்களுக்கான விதைகளாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். நமது ஊழியர்கள் மத்தியில் தொய்வையும், சோர்வையும், சலிப்பையும் அரசாங்கங்கள் ஏற்படுத்துவதன் மூலம் போராட்டங்களை நீர்த்துப்போகச் செய்யலாம் என்ற போக்கை நாம் உடைத்தெறிய வேண்டும், நம்முடைய போராட்டங்களின் வெற்றி என்பது நம்முடைய ஒற்றுமை மற்றும் உறுதியை சார்ந்தே உள்ளது. அந்த ஒற்றுமையையும் உறுதிப்பாட்டையும் நாம் எப்போதும் நிலைநிறுத்த தொழிற்சங்க ரீதியிலான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. அதிகாரம், பொய்யான வாக்குறுதிகள், அரசாணைகள், அவசரச் சட்டங்கள் போன்றவற்றின் மூலம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் போன்றவர்களின் சட்டப்படியான உரிமைகளை பறிக்க நினைக்கும் அரசாங்கம், நிறுவனம் மற்றும் அமைப்புகளிடமிருந்து உரிமைகளை மீட்டுப்பெறுவதில் சுணக்கமோ, நம்பிக்கையின்மையோ ஏற்பட்டுவிடாமல் போராட்டத்தை வெற்றிகளமாக மாற்றிட ஒரு முழுமையான தொழிற்சங்கப் பயிற்சி இந்நேரத்தில் அவசரமும் அவசியமுமானதாக உள்ளது. நம்முடைய போராட்டங்களை காலத்திற்கேற்ப மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயமும், மாற்றுவழி போராட்டங்களை

தீர்மானிக்கும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய அவசியமும், அவசரமும் இப்போது எழுந்துள்ளது. எவ்வளவு நாள் போராடினாலும் எதுவும் செய்யமுடியாது என்ற முரண்டு பிடிக்கும் அரசாங்கங்கள் நம்முடன் வந்து பேச்சு வார்த்தை நடத்தியே ஆக வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தவல்ல போர் (போராட்ட) ஆயுதங்களை நாம் தயாரித்தே ஆகவேண்டும். அதற்கான பயிற்சிப் பட்டறையாக தோழர் எம்.ஆர்.ஏ. பயிற்சி மையம் நிறுவப்பட உள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாணிக்க ஆண்டாகிய 40ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அதற்கான முயற்சிகளை நாம் முன்னெடுப்பதற்கு முத்தாய்ப்பாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாணிக்க ஆண்டு 40 அடி கொடிமர கொடியேற்று விழா நிகழ்வும், 2003ஆம் ஆண்டு காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு ஒரே அரசாணையால் பணிநீக்கம் செய்யப்பட்ட 1,76,000 அரசு ஊழியர்களின் உறுதிமிக்க நெஞ்சுரத்தை போற்றும் விதமாக நாம் ஆண்டு தோறும் ஜுலை 2ஆம் நாள் எழுச்சிநாள் கூட்டம் நம்முடைய தோழர் எம்.ஆர்.ஏ.பயிற்சி மைய கட்டிடம் அமையவுள்ள செங்கல்பட்டு காஞ்சிபுரம் நெடுஞ்சாலை திம்மாவரம், வசந்தம் நகர் முகவரியில் உள்ள இடத்தில் சிறப்பாக நடந்தேறியுள்ளது. அந்த இடத்திலேயே அக்டோபர் 7ஆம் தேதி மாநில பிரதிநிதித்துவ பேரவையை நடத்திடவும் முடிவாற்றப்பட்டுள்ளது.

ஒவ்வொரு இயக்கமும் ஒவ்வொரு போராட்டமும் நம்முடைய இருப்பை நிலைநிறுத்துவது மட்டுமல்ல அது ஒவ்வொரு அரசு ஊழியரிடமும் உரிமைக்கான நெருப்பை பற்ற வைப்பதுவும் அகும். நாம் அனைவரும் நம்முடைய விதியை மாற்றி எழுதுவதற்கான சக்தியை பெற்றிருக்கிறோம். அந்த சக்தி, பெரு நெருப்பாக தீச்சுவாலையாக கொழுந்து விட்டு எரியும் போது நம்முடைய கொந்தளிப்பின் உணர்ச்சியை ஆட்சியாளர்கள் உணரத் தலைப்படுவார்கள். நாம் எவ்வளவு நெருக்கடியான காலகட்டத்திலும் அரசிற்கு உறுதுணையாக நின்றிருக்கிறோம் என்ற வரலாற்றை அவர்கள் புரிந்து கொள்வார்கள். அதை அவர்களுக்கு அஹிம்சையால் நாம் புரிய வைக்க முடியாது. ஆனால் அந்த அஹிம்சைக்கு சற்றும் குறையாத போராட்டங்களால் புரிய வைக்கமுடியும். இதுவரை அதுதான் நிகழ்ந்திருக்கிறது. எனவே, போராட்டங்களை போர்களமாக மாற்றுவதற்கான பயிற்சிகளை மேற்கொள்வோம். சமுதாய மாற்றத்திற்கான மனித சக்தியாக உருவெடுப்போம். பறிக்கப்பட்ட உரிமைகளை, தடுக்கப்பட்ட சலுகைகளை, மீட்டெடுக்க தோழர் எம்.ஆர்.ஏ. பயிற்சி மையத்தில் நம்முடைய போராட்ட ஆயுதங்களை பட்டை தீட்டுவோம். நமக்கான உரிமைகளை அரசாங்கத்திடம் இருந்து மீட்பதற்கான வலிமையைப் பெறுவோம்.

மாநில பிரதிநிதித்துவப் பேரவை நடக்க இருக்கும் நேரத்தில் நமக்கான இயக்க கடமைகளை நாம் தவறாமல் நிறைவேற்ற வேண்டும். நாம் இன்னும் பல உறுதி மிக்க போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டியிருப்பதால் அதற்கான ஸ்தாபன அடிப்படை கடமையான வட்டக்கிளை மாவட்ட பேரவைகளை அதனுடைய அர்த்த அடர்த்தியோடு சிறப்பாக நடத்தி முடிக்க வேண்டும். அதைச் செவ்வன செய்துவிட்டு அக்டோர் 7ல் நடக்க உள்ள மாநில பிரதிநித்துவப் பேரவையில், உரிமை மீட்புக்கான போராட்டக்கனலோடு நாம் அனைவரும் ஒன்று கூடுவோம். ●

கருத்துரை

# உயர்வானதொரு லட்சியம் உங்களின் பங்களிப்பினால் வெல்வது நிச்சயம்!

**- மு.அன்பரசு**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் இப்போது அதனுடைய மாணிக்க ஆண்டை (40ஆம் ஆண்டு) கொண்டாடிக்கொண்டிருக்கிறது. அரசு ஊழியர்களின் சட்டப்படியான உரிமைகளை தர மறுக்கும் அரசாங்கங்களை எதிர்த்து போராடும் அமைப்பாக, போராட்டங்களின் வழியே அரசாங்கத்திற்கு நிர்ப்பந்தம் கொடுத்து சட்டப்படியான உரிமைகளை அரசாங்கங்கள் வழங்க வேண்டிய நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி, அதன்மூலமாக பல உரிமைகளை அரசு ஊழியர்களுக்கு பெற்றுத்தந்து கொண்டிருக்கும் அமைப்பாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஊழியர்கள் மத்தியில் கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறது. இச்சங்கம் அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காக மட்டும் போராடாமல் மக்கள் நலன், மக்கள் உரிமை, பெண் உரிமை சார்ந்த சமுதாய அக்கறை கொண்ட பல போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு ஊழியர் அமைப்பை நிறுவிய தோழர் எம்.ஆர். அப்பன் அவர்களுடைய முற்போக்குக் கருத்துக்களும் அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை மீட்டெடுப்பதில் எந்தவகையான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று அவர் காட்டிய வழிமுறைகளும்தான் இன்றுவரை இச்சங்கத்தையும், ஊழியர்களையும், நிர்வாகிகளையும் துடிப்பாகவும் உறுதியான முடிவுகள் எடுக்கும் நிலையிலும் முன்னெடுத்துச் சென்றுகொண்டுள்ளது.

ஆனாலும், தனியார்மயக் கொள்கைகள் இந்தியாவில் காலூன்றிய பின்பு அரசாங்கங்கள் அரசு ஊழியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் என அனைத்து தரப்பினர் மீதும் கொடுந்தாக்குதல்கள் தொடுத்து வருகின்றன. தங்களின் தோள்களின் மீது தேவையில்லாத சுமைகளாக அரசு ஊழியர்கள் தொழிலாளர்களை அவை பார்க்கத் துவங்கியுள்ளன. அதனால் ஒப்பந்த முறை, அவுட்சோர்சிங் போன்ற தனியார் ஏஜென்ஸிகளிடம் அரசுத்துறைகளை ஒப்படைத்துவிடுவதில் அரசாங்கங்கள் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றன.

2003ஆம் ஆண்டு தமிழகத்தில் புதிய ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தப்பட்ட பிறகு அதைத் திரும்பப் பெற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கடந்த இருபது ஆண்டுகளாக விடாப்பிடியான போராட்டங்களை நடத்தி வந்து கொண்டிருக்கிறது. இதுபோன்று சரண்டர், அகவிலைப்படி உயர்வு, ஊதிய முரண்பாடுகள், வரையறுக்கப்பட்ட ஊதியம் போன்ற பலவிதமான கோரிக்கைகளுக்காகவும் போராடி வருகிறது. ஆனால் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் இப்போராட்டங்கள் இன்னும் வீரியம் பெறவேண்டிய அவசியம் எழுந்திருக்கிறது. அரசு ஊழியர்கள், தொழிலாளர்களை போராட்டக் களங்களில் உறுதியோடு நின்று போராட அவர்களுக்கு உரிய தொழிற்சங்க பயிற்சி இந்நாளில் மிக அவசியமானதாக மாறியுள்ளது. அதிகாரம், பொய்யான வாக்குறுதிகள், அரசாணைகள், அவசரச் சட்டங்கள் போன்றவற்றின் மூலம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தொழிலாளர்கள் போன்றவர்களின் சட்டப்படியான உரிமைகளை பறிக்க நினைக்கும் அரசாங்கம், நிறுவனம் மற்றும் அமைப்புகளிடமிருந்து

உரிமைகளை மீட்டுப்பெறுவதில் சுணக்கமோ, நம்பிக்கையின்மையோ ஏற்பட்டுவிடாமல் போராட்டத்தை வெற்றிகளமாக மாற்றிட ஒரு முழுமையான தொழிற்சங்கப் பயிற்சி இந்நேரத்தில் அவசரமும் அவசியமுமானதாக உள்ளது.

இதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தோழர் எம்.அர்.அப்பன் அவர்களின் போர்க்குணம் மிக்க போராட்டங்களை, போராட்ட முறைகளை, அரசாங்ககளிடமிருந்து உரிமைகளை பெற அவற்றை எதிர்கொள்ளும் யுக்திகளை அரசு ஊழியர்களுக்கு பயிற்றுவிக்க ஒரு பயிற்சி மையத்தை கட்டி எழுப்ப உறுதி பூண்டுள்ளது. இதற்காக செங்கற்பட்டுக்கு அருகில் 10,000 சதுரஅடி கொண்ட இடத்தை வாங்கியுள்ளது. இவ்விடத்தில் அனைத்துத்துறை ஊழியர்களுக்கான தொழிற்சங்க பயிற்சிக் கூடத்தை இந்த மாணிக்க ஆண்டில் கட்டி எழுப்பிடும் முயற்சிகளை தொடங்கியிருக்கிறோம்.

மேற்படி பயிற்சி மையத்தை கட்டி முடிக்க எல்லோருடைய ஒத்துழைப்பும் நிதியுதவியும் பொருளுதவியும் இன்றியமையாததாகும். ஒரு நல்ல நோக்கத்திற்காக வருங்கால அரசு ஊழியர், ஆசிரியர், தொழிலாளர் சந்ததியினருக்கு நல்லதொரு தொழிற்சங்க உணர்வும், உரிமைகளை மீளப் பெறுவதில் போர்க்குணமும், விடாப்பிடியான போராட்டங்களை சளைக்காமல் எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தையும் உருவாக்குவதற்கான லட்சியத்தில் தங்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். எனவே தாங்கள் தாராள மனத்தோடு, தயாள குணத்தோடு, நமது அனைவரின் லட்சியக் கனவுகள் மெய்ப்பட நிதியும், பொருளும் வழங்கி இந்த பயிற்சி மையம் வானுயர வாழ்த்திட வேண்டுகிறோம். உயர்வானதொரு லட்சியம் உங்களின் பங்களிப்பினால் வெல்வது நிச்சயம்! ●

ஒரு சுரண்டலுமின்றி
உழைப்பவர்க்கு ஒரு
வாழ்க்கை வேண்டுமென்ற
ஏக்கம் மட்டும் போதாது
இயக்கமாக போராடு
போராட்டமில்லாமல்
எதுவும் புதிதாக கிடைக்காது!

நாளின்
ஒவ்வொரு துளியும்
மூலதனத்தால்
உறிஞ்சப்படுகிறது
நரம்பின்
ஒவ்வொரு உயிர்ப்பும்
முதலாளிகளால்
விழுங்கப்படுகிறது!

இடம் பெயர்க்கப்படும்
வாழ்க்கை
நிலம் பெயர்க்கப்படும்
இயற்கை
அட்டைகளே வெறுக்கும்
அடிபணிதல் எதற்கு?
கரையான்களே வெறுக்கும்
மௌனங்கள் நொறுக்கு!

# சிவப்புச் சூரியன் ஜோதிபாசு

**- பெரணமல்லூர் சேகரன்**

ஜோதிபாசு என்ற பெயரைச் சொன்னாலே, அச்சம் அல்லது பெருமிதம் கொள்பவர்கள்தாம் உண்டு. இன்று தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கு அவரது பெயரிடப்பட்டு உலாவருவதைப் பார்க்கலாம்.

கொல்கத்தாவில் கடந்த 1914ம் ஆண்டு ஜுலை 8ம் தேதி அன்று ஜோதிபாசு பிறந்தார். அவரது தந்தை நிஷிகந்தா பாசு, ஒரு டாக்டர். தாயார் பெயர் ஹேமலதா. மிகவும் கட்டுப் பெட்டியான குடும்பத்தில் பிறந்த ஜோதிபாசு, 1920 ம் ஆண்டு கொல்கத்தாவில் உள்ள லொரெட்டோ பள்ளியில் சேர்க்கப்பட்டார். பள்ளிக் கல்வியை கொல்கத்தாவில் முடித்த அவர், 1935 ம் ஆண்டு பாரிஸ்டர்' (வக்கீல்) பட்டம் படிப்பதற்காக லண்டன் சென்றார். அந்தச் சமயத்தில், இந்திய சுதந்திரப் போராட்டம் தீவிரமாக நடந்தது. எனவே, லண்டனில் இருந்தபடியே அங்கிருந்த இந்திய மாணவர்களுடன் இணைந்து ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஜோதிபாசு போராடினார். அதன் தொடர்ச்சியாக, இங்கிலாந்தில் உள்ள கம்யூனிச தலைவர்களின் நெருக்கம் அவருக்குக் கிடைத்தது.

ரஜினி பாமிதத் உள்ளிட்ட தலைவர்களின் வழியில் கம்யூனிஸ்டு பாதையில் நடக்க ஆரம்பித்தார். ஜோதிபாசு தன் வாழ்நாளில் அடக்குமுறைகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் எதிர் கொண்டிருக்கிறார். ‘‘இழப்பதற்கு எதுவும் இல்லை அடிமை விலங்கைத் தவிர’’ என்ற மார்க்சின் பெருமைமிகு வரிகள் ஜோதிபாசுவின் குடும்பச் சூழலில் பொருந்துவதில்லை. ஆனால் பாசு கம்யூனிஸ்ட் இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்ட நிலையில், இ. எம்.எஸ், சுர்ஜித், பி.சுந்தரய்யா, பி.ராமமூர்த்தி போன்ற தலைவர்கள் அனைவருமே அது போன்ற வசதியான வாழ்க்கையை உதறிவிட்டு வந்தவர்கள. தேசிய இயக்கத்தின் ஈர்ப்பு ஒரு பக்கம் இருந்தாலும், நேதாஜி குறிப்பிட்ட முள் படுக்கையைத் தேர்ந்தெடுக்க இத்தகையத் தலைவர்களின் அர்ப்பணிப்பு உணர்வு இளம் தலைமுறை கற்றுத்தேற வேண்டிய ஒன்று. ஒருமுறை பாட்னா ரயில் நிலையத்தில் ஜோதிபாசு வந்திறங்கியபோது நக்சலைட் தீவிரவாதி ஒருவன் அவரைத் துப்பாக்கியால் சுட்டான். குண்டு குறிதவறி அவரது பக்கத்திலிருந்த ஒரு எல்.ஐ.சி. தோழர் மீது பாய்ந்தது. அந்தச் சமயம் எதற்கும் அஞ்சாமல் பதற்றமடையாமல் இருந்தார் ஜோதிபாசு. அவர் ஓடி ஒளியவில்லை. 'அவனைப் பிடியுங்கள்' என்று அந்த மனிதனைப் பார்த்து கையைக் காட்டினார். அத்தகைய சூழ்நிலையில் இப்படிப்பட்ட துணிச்சல் வெகு சிலருக்கே இருப்பதுண்டு. 1946ம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியின்போது நடந்த வங்காள சட்டசபை தேர்தலில், ரயில்வே தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். முதன் முதலில் களம் கண்ட தேர்தலில் வெற்றி வாகை சூடினார். அன்றிலிருந்து 2001 ம் ஆண்டு வரை மேற்கு வங்காள சட்டசபைக்குள போட்டியிட்டு தொடர்ந்து வெற்றி பெற்று வந்தார். இடையே, 1972 ம் ஆண்டு மட்டும் தோல்வியடைந்தார்.



1962ம் ஆண்டில் சீனாவில் போர் நடந்தபோது கொள்கை ரீதியாக கம்யூனிஸ்டு கட்சியில் பிளவு ஏற்பட்டது. அப்போது, அவர் சிறையில் இருந்தார். பின்னர், இந்திய கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றியதும் அதில் அவர் இணைந்தார். இந்தியாவிலும் சரி, மேற்கு வங்காளத்திலும் சரி மார்க்சிஸ்ட் கட்சியை நிலை நிறுத்திய முக்கியத் தலைவர்களில் அவரும் ஒருவர். 1989ம் ஆண்டிலும், 1996 ம் ஆண்டிலும் காங்கிரஸ் மற்றும் பா.ஜனதா அல்லாத ஆட்சி மத்தியில் வரும் அளவுக்கு அரசியலில் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வந்தவர் ஜோதிபாசு என்றால் அது மிகையாகாது.

மார்க்சிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ மற்றும் மத்திய கமிட்டியில் உறுப்பினராகத் தொடர்ந்து நீடித்து வந்தார். 2000 ம் ஆண்டில் உடல் நலக்குறைவு காரணமாக பொலிட்பீரோ பதவியிலிருந்து அவர் விலகினாலும், கட்சி விடவில்லை. எனவே, கட்சியின் வற்புறுத்தல் காரணமாக 2008 ம் ஆண்டு வரை கட்சிப் பொறுப்பில் நீடித்தார்.


1969-75 காலகட்டத்தில் இந்திராகாந்தி ஏவிய அரைப் பாசிச அடக்குமுறைக்கும், 1975-77 காலகட்டத்தின் நெருக்கடி நிலைக் கொடுங்கோன்மைக்கும் முகங்கொடுத்து இயக்கத்தை கட்டிக் காத்தவர் ஜோதிபாசு. 1977 நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் தோற்ற பின், அதே ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலில் இடது முன்னணி வெற்றி பெற்றது. ஜோதிபாசு முதல்வராகப் பொறுப்பேற்றார். 1977 முதல், 2000ம் ஆண்டுவரை இடைவெளியே இல்லாமல் தொடர்ந்து 23 ஆண்டு காலம், மேற்கு வங்காள முதல் மந்திரியாக இருந்தார். இந்தியாவில் யாருமே இவ்வளவு நீண்ட காலம் முதல் மந்திரியாக இருந்தது கிடையாது. மேலும், தொடர்ந்து 23 ஆண்டு காலம் பதவியில் இருந்ததும் கிடையாது. அத்தகைய அபூர்வ சாதனையை ஜோதிபாசு நடத்திக் காட்டினார். 1996ம் ஆண்டில் காங்கிரஸ் மற்றும் பா.ஜனதா ஆகிய இரண்டு கட்சிகளும் அல்லாத புதிய ஆட்சி அமையும் சூழ்நிலை மத்தியில் உருவானது.

அப்போது, டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் தலைவர்கள் கூடி விவாதித்தனர். வி.பி.சிங் உள்பட பல்வேறு தலைவர்களின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட நிலையில், மார்க்சிஸ்ட்கட்சித் தலைமையிலேயே ஆட்சி அமைக்கலாம் என்றும், ஜோதிபாசு பிரதமராகலாம் என்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் முடிவு செய்தனர். கட்சி பாகுபாடின்றி ஜோதிபாசுவுக்கு ஆதரவு பெருகியது. ஆனால், கூட்டணி ஆட்சிக்குத் தலைமை ஏற்பதில்லை' என்ற கொள்கையைப் பின்பற்றி வருவதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் குழு எடுத்த அந்த முடிவால், ஜோதிபாசு பிரதமராகும் வாய்ப்பு நழுவியது. மார்க்சிஸ்ட் கட்சியின் முடிவை ஏற்றுக் கொண்டார் ஜோதிபாசு.

இந்தியாவின் கீழ்வானில் உதித்து, மார்க்சிஸ்ட் கட்சியை இந்தியாவின் தலைமை பீடத்தின் அருகில் வரை அழைத்துச் சென்ற சிவப்பு சூரியன்' பிறந்த தினம் ஜூலை8. ●

## "பஞ்ச்"

மொரப்பா



"நான் உங்கள் பிரதமர், ஆனால் எந்த வகையிலும் உங்கள் மன்னன் அல்ல, உங்கள் ஆட்சியாளர் கூட இல்லை. நான் உண்மையில் உங்கள் வேலைக்காரன், என் கடமையில் நான் தோல்வியடைவதை நீங்கள் காணும்போது, என் காதை பிடித்து திருகி ஆட்சி நாற்காலியிலிருந்து நீக்குவது உங்கள் கடமை"

– ஜவஹர்லால் நேரு

கட்டுரை

# எழுச்சி நாளின் இருபதாம் ஆண்டு நிறைவு

**- மு.அன்பரசு**

காலத்திற்கேற்ற போராட்டங்களை கட்டமைக்கவும், மாற்றுவழி போராட்டங்களை முன்னெடுக்கவும், இழந்ததை மீட்டெடுக்கவும், எழுச்சிநாள் கூட்டத்தில் முடிவெடுப்போம்

கடந்து வந்த பாதைகளை திரும்பிப் பார்க்கும் போது பிரமிப்பாகத்தான் இருக்கிறது; இவ்வளவு செங்குத்தான உயரத்தையா தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கடந்து வந்திருக்கிறது என்று! மலைகளின் உச்சிகளில் இருந்து, மேகங்களின் இடுக்குகளிலிருந்து நம் முன்னோடித் தோழர்கள் சொல்வது போல் சில வார்த்தைகள் கேட்கின்றன. "கடந்து வந்திருக்கிற தூரம் கடினமானதுதான் என்றாலும் நிகழ்ச்சி நிரலில் இன்னும் நீண்டதூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. நினைவில் கொள்ளுங்கள்.

நாற்பது ஆண்டுகளை கண்டிருக்கிற ஒரு இயக்கத்தை இன்னும் உயிர்த்துடிப்பாக வைத்திருக்க வேண்டிய அவசியத்தை நம் எதிர் நிற்கும் சவால்கள் உணர்த்துகின்றன. புதிய உரிமைகளை போராடிப் பெறுவதற்காக உருவாக்கப்பட்ட இயக்கம் இன்றைய சூழலில், இருக்கின்ற உரிமைகளை தக்க வைத்துக்கொள்ளவே தலைகீழாக நின்று போராட வேண்டியிருக்கிறது. பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுவதற்காக கடந்த இருபது ஆண்டுகளாக போராடிக் கொண்டிருக்கிறோம். ஊதிய முரண்பாட்டை தீர்க்க வேண்டுமென்ற கோரிக்கை ஒரு தலைமுறையாக நிலுவையில் வைக்கப்பட்டிருக்கிறது. காலிப் பணியிடங்களை நிரப்பிட வேண்டும் என்ற முறையீடுகள் முற்றாக நிராகரிக்கப்பட்டு இன்று ஆறு லட்சம் காலிப் பணியிடங்கள் அரசுத்துறைகளில் காலியாக விடப்பட்டுள்ள அவலம் தொடர்ந்து கொண்டிருப்பதை பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த ஆறுலட்சம் ஊழியர்களின் பணிகளை இப்போது பணியிலுள்ள அரசு ஊழியர்களாகிய நாம் முதுகெலும்பு உடைய சுமந்துகொண்டிருக்கிறோம்.

ஆறு லட்சம் தமிழக இளைஞர்களின் எதிர்காலமும் வாழ்வாதாரமும் இதன்மூலம் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற சமூகநீதிக் கோட்பாட்டையும் அரசாங்கத்தின் முன் வைத்து போராடுகிறோம். ஆனால் எந்த அரசாங்கமாக இருந்தாலும் சமூக நீதியைப்பற்றி, தமிழக இளைஞர்களின் எதிர்காலம் பற்றி அக்கறை கொள்வதாக இல்லை. அதற்கு மாறாக அவுட்சோர்சிங் அரசாணைகளை வெளியிட்டு இடஒதுக்கீட்டு கொள்கைகளை இழுத்து மூடவும், அரசுத்துறைகளை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவும்தான் முனைந்துள்ளன. தேர்தல் வாக்குறுதி என்ற பொய் அறிக்கை மூலம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் போன்ற அனைத்துத்தரப்பு உழைக்கும் மக்களின், அவர்தம் குடும்பத்தாரின் ஓட்டுக்களை பெற நயவஞ்சக நம்பிக்கைத் துரோகங்களை நாகூசாமல் செய்து வருகின்ற அரசியல் தலைவர்களைத்தான் நாம் பார்த்து வருகிறோம்.

சமூக நீதிக்காக போராடிய திராவிட அரசாங்கங்கள்தான் இன்று சொந்த நாட்டில் இளைஞர்களை கையேந்தும் நிலைக்கு ஆளாக்கியுள்ளன. வருடந்தோறும் 3 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதி காற்றில் கரைந்து காணாமல் போனதுதான் திராவிட மாடல் அரசாங்கத்தின் சாதனையாக உள்ளது. சத்துணவு ஊழியர்கள் முப்பது

ஆண்டுகளாக வரையறுக்கப்பட்ட ஊதியம், ஓய்வூதியம் கேட்டு போராடி வருகிறார்கள். அவர்களின் கோரிக்கையை எந்த திராவிட அரசாங்கமும் திரும்பிப் பார்க்கவில்லை. இதற்காகவும் நாம் தொடர்ந்து போராடி வருகிறோம். இவை தவிர மதிப்பூதியம், தொகுப்பூதியம், ஒப்பந்த ஊதியம் பெறுபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் நிர்ணயிக்கப்படாமல் உள்ளது. சாலைப்பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்தை பணிவரன்முறை செய்திட வேண்டுமென வைக்கப்பட்ட கோரிக்கை பரிசீலிக்கப்படாமல் உள்ளது. கொரோனாவை காரணம் காட்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரண்விடுப்பும் மௌனமாக மறுக்கப்பட்டு வருகிறது. இவை போன்ற நிறைவேற்றப்படாத எண்ணிலடங்கா நிலுவை கோரிக்கைகள். எவ்வளவுதான் போராடினாலும் இசைந்துகொடுக்காத அரசாங்கங்களின் நடவடிக்கைகளினால் அரசு ஊழியர்கள் மத்தியில் சோர்வையும், சலிப்பையும் ஏற்படுத்தியுள்ளன. இந்த நேரத்தில் நாம் நம் கடந்தகால போராட்டங்களை திரும்பிப் பார்க்க வேண்டியது அவசியமானதாகும்.

தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடிய போராட்டங்களில் பிரம்மாண்டமானது 22.6.1988ஆம் தேதியிலிருந்து 31 நாட்கள் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டம். அன்றைய தேதியில் பணியில் இருந்த அரசு ஊழியர்களோ, ஆசிரியர்களோ அவ்வளவு சீக்கிரம் மறந்து விட முடியாத போராட்டம் அது, 8 லட்சம் அரசு ஊழியர்-ஆசிரியர்கள் பங்கேற்று வரலாறு படைத்த 31 நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தின் விளைவாக மத்திய அரசுக்கு இணையான ஊதியம், ஒருமாத ஊதியம் போனஸ் ஆகியவற்றைத் தர தமிழக அரசை ஒப்புக்கொள்ள வைத்த வரலாற்றுச் சிறப்பு மிக்க போராட்டம்.

மறக்கமுடியாத இன்னொரு போராட்டம் 2003ல் அரசு ஊழியர்-ஆசிரியர்கள் மீண்டும் ஒன்றுகூடி நடத்திய காலவரையற்ற போராட்டம். அரசு ஊழியர்கள் போராட்டங்களில் ஈடுபட்டால் எஸ்மா, டெஸ்மா உள்ளிட்ட அனைத்துச் சட்டங்களும் பாயும் என்று சொன்ன அன்றைய முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களின் மிரட்டலுக்கு பயப்படாமல் அவரின் அரசை எதிர்த்து நின்று போராடிய போராட்டம். கோபமுற்ற ஜெயலலிதா ஒரே அரசாணையில் ஒரு இலட்சத்து 76 ஆயிரம் பேரை டிஸ்மிஸ் செய்தபோதும் மனம் தளராமல் நின்று போட்ட அரசாணையை திரும்பப்பெற வைத்த போராட்டம். 2003ல் நடைபெற்ற வேலை நிறுத்தப்போராட்டம் அதன் விளைவாக ஏற்பட்ட பணிநீக்கம் நீக்கப்பட்ட ஊழியர்களை மீளப்பணியமர்த்த மேற்கொண்ட நடவடிக்கைகளை அவற்றின் மூலமாக ஏற்பட்ட அனுபவங்களையும் வெற்றியையும் நினைவுகூறும் வகையில்தான் நாம் ஆண்டுதோறும் ஜூலை 2ஆம் நாளை எழுச்சி நாளாகக் கொண்டாடி வருகிறோம். 2003ல் போராட்ட களத்திலிருந்த அரசு ஊழியர்களின் நெஞ்சுரமும், பணிநீக்கம் செய்யப்பட்ட அரசு ஊழியர்களின் மனோதிடமும், பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை அரண்போல் காத்த அரசு ஊழியர் சங்கத்தின் நடவடிக்கைகளும் இன்றுவரை அனைத்துத் தரப்பினராலும் போற்றப்பட்டு வருகிறது.

அரசு ஊழியர்களின் மீது செல்வி ஜெயலலிதா தொடுத்த மேற்கண்ட தாக்குதலுக்கு எதிர்வினையாற்றும் பொருட்டு 2006ல் செல்வி ஜெயலலிதாவின் அரசாங்கத்தை ஆட்சிக்கட்டிலில் இருந்து இறக்க, மக்கள் சந்திப்பு பிரச்சாரம், வாகனப் பிரச்சாரம், மாவட்டம்தோறும் பிரச்சாரம் என பலகட்ட இயக்கங்களை நடத்தி அடுத்த தேர்தலில் அவர் தோற்றுப் போகத்தொண்டாற்றி "பகை முடிக்கும் பணி முடித்த போராட்டம் மிகவும் மகத்தானது. அது அரசு ஊழியர்கள் என்றால் யார் என்பதை ஒவ்வொரு அரசியல்வாதிக்கும் உணர்த்தியது. அரசு ஊழியர்களிடம் வாய்மை தவறி நடந்து கொண்டால் என்ன ஏற்படும் என்பதை உணர்த்திய போராட்டம் அது.

அதனால்தான் அரசு ஊழியர்களின் அருமையை புரிந்துகொண்டவராக ஜெயலலிதா

மாறினார். அதன் காரணமாகவே 2011ல் தேர்தல் அறிக்கையில் தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் புதிய பென்சன் திட்டம் திரும்ப பெறப்பட்டு பழைய பென்சன் தொடர வழிவகை காணப்படும் என்றும் தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம் போன்ற கூலிமுறைகள் ஒழிக்கப்பட்டு முறையான காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்றும் வாக்குறுதி அளித்தார். அவருக்காக வாக்களித்து நாலரை வருடங்கள் காத்திருந்த அரசு ஊழியர்களின் பொறுமை மீண்டும் கைமீறியதால் 2016-ல் காலவரையற்ற போராட்டத்தை அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பத்து நாட்கள் காலவரையற்ற போராட்டம் நடத்திய பின்பு சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழ் 11 அறிவிப்புகளை செல்வி ஜெயலலிதாவின் அரசு வெளியிட்டது. செல்வி ஜெயலலிதா வெளியிட்ட அறிவிப்புகளில் முக்கிய அறிவிப்புகளான காலமுறை ஊதியம் ஒழிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பும், புதிய பென்சன் திட்டத்தை திரும்பப் பெற்று பழைய ஓய்வூதியத் திட்டத்தை தொடருவதற்காக சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கு வல்லுநர் குழு அமைக்கப்படும் என்ற அறிவிப்பும்தான் அந்தப் போராட்டத்தை திரும்பப் பெறவைத்தது. அதன்பிறகு ஜெயலலிதா அம்மையார் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்ட நிலையில் ஆட்சிப்பொறுப்பேற்ற எடப்பாடி பழனிச்சாமி அரசு ஊழியர்களை ஒரு பொருட்டாகவே மதிக்காததால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தேர்தல் களத்தையே போராட்டகளமாக மாற்றி அதிமுக அரசை வீட்டுக்கு அனுப்பிய வரலாறுதான் சென்ற தேர்தலில் நடந்தேறியது.

சென்ற தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், நம்முடைய கோரிக்கைகளில் உள்ள நியாயங்களை உள்வாங்கிக் கொண்டதோடு மட்டுமல்லாமல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நடத்திய போராட்டக் களங்களுக்கே நேரடியாக வந்து நமக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்ததோடு, நாம் நடத்திய மாநாட்டிலும் கலந்துகொண்டு ஆசிரியர்கள் அரசு ஊழியர்களின் அனைத்து கோரிக்கைகளையும் ஆட்சிக்கு வந்ததும் தீர்த்து வைப்பேன் என்று உறுதிமொழியையும் தந்தார். அவர் சொன்னபடி, அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்கள் குடும்பத்தினருடன் வாக்களித்ததோடு மட்டுமல்லாமல், பிரச்சாரங்களும் செய்து திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக அமர முக்கியப் பங்காற்றினோம். ஆனால் முதல்வராகி இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் அவர், தேர்தலிலும் அதற்கு முன்பும் கொடுத்த வாக்குறுதிபடி அரசு ஊழியர்களின் கோரிக்கைளில் ஒன்றைக்கூட செயல்படுத்தாமல் இருப்பதோடு, அவுட்சோர்சிங் அரசாணைகளை வெளியிட்டு ஒட்டுமொத்த அரசாங்கத்தையும் தனியார்மயமாக்கும் முடிவை முன்னெடுத்துள்ளார். இதன்மூலம் நமக்கு, ஆள்வது எந்தக்கட்சியாக இருந்தாலும் அவர்கள் யாரும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை கொடுப்பதற்கு மனமற்றவர்களாக உள்ளார்கள் என்பதும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் அவர்தம் குடும்பத்தினரின் ஓட்டுக்களை பெறுவதற்காக எந்த நிலைக்கும் இறங்கி வந்து பொய்யான வாக்குறுதிகளைச் சொல்வார்கள் என்பது மீண்டும் மீண்டும் உணர்த்தப்பட்டுள்ளது.

இந்த 40 ஆண்டு காலத்தில் அரசாங்கங்களின் நடவடிக்கைகளும் அதை நம் ஊழியர்கள் எதிர்கொண்டு போராடி வெற்றி பெற்ற விதங்களும் நம்முடைய நாளைய போராட்டங்களுக்கான விதைகளாகும். நமது ஊழியர்கள் மத்தியில் தொய்வையும், சோர்வையும், சலிப்பையும் அரசாங்கங்கள் ஏற்படுத்துவதன் மூலம் போராட்டங்களை நீர்த்துப்போகச் செய்யலாம் என்ற போக்கை நாம் உடைத்தெறிய வேண்டும், நம்முடைய போராட்டங்களின் வெற்றி என்பது நம்முடைய ஒற்றுமை மற்றும் உறுதியை சார்ந்தே உள்ளது. அந்த ஒற்றுமையையும் உறுதிப்பாட்டையும் நாம் எப்போதும் நிலைநிறுத்த தொழிற்சங்க ரீதியிலான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

அதிகாரம், பொய்யான வாக்குறுதிகள், அரசாணைகள், அவசரச் சட்டங்கள் போன்றவற்றின் மூலம் அரசு ஊழியர்கள். ஆசிரியர்கள், தொழிலாளர்கள் போன்றவர்களின் சட்டப்படியான உரிமைகளை பறிக்க நினைக்கும் அரசாங்கம், நிறுவனம் மற்றும் அமைப்புகளிடமிருந்து உரிமைகளை மீட்டுப்பெறுவதில் சுணக்கமோ, நம்பிக்கையின்மையோ ஏற்பட்டுவிடாமல் போராட்டத்தை வெற்றிக்களமாக மாற்றிட ஒரு முழுமையான தொழிற்சங்கப் பயிற்சி இந்நேரத்தில் அவசரமும் அவசியமுமானதாக உள்ளது. நம்முடைய போராட்டங்களை காலத்திற்கேற்ப மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயமும், மாற்றுவழி பேராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய அவசியமும், அவசரமும் இப்போது எழுந்துள்ளது. எவ்வளவு நாள் போராடினாலும் எதுவும் செய்யமுடியாது என்ற முரண்டு பிடிக்கும் அரசாங்கங்கள் நம்முடன் வந்து பேச்சு வார்த்தை நடத்தியே ஆக வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தவல்ல போர் (போராட் ஆயுதங்களை நாம் தயாரித்தே ஆகவேண்டும். அதற்கான பயிற்சிப் பட்டறையாக தோழர் எம்.ஆர்.ஏ. பயிற்சி மையம் நிறுவப்பட உள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாணிக்க ஆண்டாகிய 40ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அதற்கான முயற்சிகளை நாம் முன்னெடுப்பதற்கு முத்தாய்ப்பாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாணிக்க ஆண்டு 40 அடி கொடிமர கொடியேற்று விழா நிகழ்வும், 2003ஆம் ஆண்டு காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு ஒரே அரசாணையால் பணிநீக்கம் செய்யப்பட்ட 1.76,000 அரசு ஊழியர்களின் உறுதிமிக்க நெஞ்சுரத்தை போற்றும் விதமாக நாம் ஆண்டு தோறும் ஜுலை 2ஆம் நாள் அனுசரிக்கும் எழுச்சிநாளை இன்னொரு புரட்சிப் போராட்டத்தின் துவக்கமாக மாற்றிட எழுச்சிநாள் கூட்டமும், நம்முடைய தோழர் எம்.ஆர்.ஏ.பயிற்சி மைய கட்டிடம் அமையவுள்ள செங்கல்பட்டு காஞ்சிபுரம் நெடுஞ்சாலை திம்மாவரம், வசந்தம் நகர் முகவரியில் உள்ள இடத்தில் 02.07.2023 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஒவ்வொரு இயக்கமும் ஒவ்வொரு போராட்டமும் நம்முடைய இருப்பை நிலைநிறுத்துவது மட்டுமல்ல அது ஒவ்வொரு அரசு ஊழியரிடமும் உரிமைக்கான நெருப்பை பற்ற வைப்பது. நாம் அனைவரும் நம்முடைய விதியை மாற்றி எழுதுவதற்கான சக்தியை பெற்றிருக்கிறோம். அந்த சக்தி, பெரு நெருப்பாக தீச்சுவாலையாக கொழுந்து விட்டு எரியும் போது நம்முடைய கொந்தளிப்பின் உணர்ச்சியை ஆட்சியாளர்கள் உணரத் தலைப்படுவார்கள். நாம் எவ்வளவு நெருக்கடியான காலகட்டத்திலும் அரசிற்கு உறுதுணையாக நின்றிருக்கிறோம் என்ற வரலாற்றை அவர்கள் புரிந்து கொள்வார்கள். அதை அவர்களுக்கு அஹிம்சையால் நாம் புரிய வைக்க முடியாது. ஆனால் அந்த அஹிம்சைக்கு சற்றும் குறையாத போராட்டங்களால் புரிய வைக்கமுடியும். இதுவரை அதுதான் நிகழ்ந்திருக்கிறது. எனவே, போராட்டங்களை போர்க்களமாக மாற்றுவதற்கான பயிற்சிகளை மேற்கொள்வோம். சமுதாய மாற்றத்திற்கான மனித சக்தியாக உருவெடுப்போம். பறிக்கப்பட்ட உரிமைகளை, தடுக்கப்பட்ட சலுகைகளை, மீட்டெடுக்க தோழர் எம். ஆர்.ஏ. பயிற்சி மையத்தில் நம்முடைய கத்திகளை பட்டை தீட்டுவோம். நமக்கான உரிமைகளை அரசாங்கத்திடம் இருந்து மீட்பதற்கான வலிமையைப் பெறுவோம்.

சளைக்காத நம் முயற்சிகள் விடாத பயிற்சிகளால் நிச்சயம் உயர்ச்சி பெறும். அதற்கான நிகழ்ச்சி நிரலை உறுதி செய்வதற்கு எழுச்சிநாள் கூட்டத்தில் நாம் அனைவரும் உறுதி ஏற்றுக் கொண்டுள்ளோம் எழுச்சி நாளில் முடிவெடுத்திருக்கிறோம். இழந்து நிற்கும் உரிமைகளை திரும்பப்பெற தீர்க்கமான முடிவெடுத்திருக்கிறோம். அரசுப் பணியை மக்களுக்காக அர்ப்பணிபோம். மண்ணும், மக்களும், மாநிலமும் பயனுற, சமூக நலன் காக்க உறுதி ஏற்போம்! ●

கட்டுரை

# ஆளுநர் அவராகவே வெளியேறுவது நல்லது

## – பெரணமல்லூர் சேகரன்

'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளிதழில் ஆளுநர் ரவியின் நேர்காணல் 'நுணலும் தன் வாயால் கெடும்' எனும் பழமொழியைத்தான் நினைவுபடுத்துகிறது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்குட்பட்டவர்தான் ஆளுநர் என்பதை செலக்டிவ் அம்னீஷியாவாக அவ்வப்போது மறந்து 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்று வாய்க்கு வந்தபடி பொறுப்பற்றுப் பேசுபவராக தொடர்ந்து இருந்து வருகிறார் ஆளுநர் ஆர்.என். ரவி.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் நாள் ஆளுநர் தர்மபுரம் ஆதீனம் சென்றபோது ஆளுநருக்கு எதிர்ப்புத் தெரிவிக்க 90 பேர் கூடியிருந்தனர். அவர்களுள் 10 பெண்கள். அங்கு ஏற்பட்ட சம்பவ அடிப்படையில் அறிவழகன் என்ற கிராம நிர்வாக அலுவலர் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் 7 பெண்கள் மற்றும் 27 ஆண்கள் உட்பட 34 பேர் முதல் தகவல் அறிக்கையின் பேரில் கைது செய்யப்பட்டு வழக்கு பதியப்பட்டுள்ளது. அடுத்த நாள் ஆளுநர் மாளிகையிலிருந்து காவல்துறையில் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது. அதற்கான விளக்கமும் மயிலாடுதுறை காவல் நிலையம் மூலம் விளக்கமும் தரப்பட்டுள்ளது. ஆனால் காவல்துறை நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என நேர்காணலில் ஆளுநர் ரவி கூறியிருப்பது ஆர்.எஸ்.எஸ். வகையறாக்களுக்கு இயல்பாக உள்ள பொய்யுரை போலும். ஒரு பிரச்சனையில் ஒரு முதல் தகவல் அறிக்கை, ஒரு வழக்கு தானே போட முடியும் என்பதுகூட முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரியான ஆளுநர் ரவி அறியாததா?

தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகள் குறித்து விமர்சித்துள்ள ஆளுநர் ரவி ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள கோயில் நிலங்களில் 3000 ஏக்கர் நிலங்கள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். இரண்டாண்டுகளில் தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கை மூலமாகத்தான் 3000 ஏக்கர் நிலத்தைக் கூட மீட்க முடிந்தது என்பதையும் கடந்த அதிமுக ஆட்சியில் எந்தக் கோயில் நிலமும் மீட்கப்படவில்லை என்பதையும் வசதியாக மறந்து விடுகிறார் ஆளுநர். அதுமட்டுமன்றி அவ்வாறு கோயில் நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ளதே ஆளுநரின் செல்லப்பிள்ளைகளான சனாதன வாதிகள் என்பதை ஏன் மறைக்கிறார்?

2022ல் சிதம்பரம் நடராஜர் கோவிலில் தீட்சிதர்களால் நடத்தப்பட்ட குழந்தைத் திருமணங்கள் தொடர்பாக வந்த புகார்களின் அடிப்படையில் காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு சம்மந்தமாக கருத்து சொல்வதே தவறு. ஆனால் அதைத்தாண்டி அப்படிப்பட்ட குழந்தைத் திருமணங்கள் ஏதும் நடைபெறவில்லை என்று வாதாடுவதும் தீர்ப்பளிப்பதுமான வேலையை சட்டத்துக்கு முரணாக ஆளுநர் தெரிவித்திருப்பது அத்துமீறல். மேலும் தனிப்பட்ட பழிவாங்கும் நடவடிக்கையாக நேர்காணலில் ஆளுநர் சித்தரித்துள்ளார். உத்தரப்பிரதேசம் போன்ற பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் இதுபோல் பேச முடியுமா? பெண்ணின் திருமண வயது 21 ஆக ஒன்றிய அரசு சட்டம் கொண்டு வந்திருப்பது ஆளுநர் ரவிக்குத் தெரியாதா?

திராவிட தத்துவம் காலாவதியாகிவிட்டதாக உளறிக் கொட்டியுள்ளார் ஆளுநர். சனாதனத்திற்கு எதிராகப் பேசுவதும் எழுதுவதுமான தி.மு.க. வின் நடவடிக்கைகளும் அரசு திட்டங்களும் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தில் ஊறிப்போன ஆளுநர் ரவிக்கு எரிச்சலை ஏற்படுத்துகிறது. அதன் வெளிப்பாடே இந் நேர்காணல்.

தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியில்லை என்றும் அதன் ஒரு பகுதியாக போதைப்

பொருட்கள் பாகிஸ்தான் நாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வருகிறது என்றும் கூறியுள்ளார் ஆளுநர் ரவி. உள்துறை அமித்ஷா வசம் உள்ளதும் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குப் போதைப் பொருள் வருவது உண்மையெனில் ஒன்றிய உள்துறை வேடிக்கை பார்ப்பதும் குறித்து ஆளுநர் கள்ள மௌனம் சாதிப்பதேன்? புல்வாமா தாக்குதல் குறித்து ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் முன்னாள் ஆளுநர் சத்யபால் சிங் புட்டுப்புட்டு வைத்துள்ளாரே ஆளுநரின் நாக்கு ஒன்றிய உள்துறை மீது ஏன் நீளவில்லை?

தமிழ்நாட்டில் கல்வித்தரம் குறைந்து வருவதாக நீலிக்கண்ணீர் வடித்துள்ளார் ஆளுநர் ரவி. 1950 முதல் 1970 வரை தமிழ்நாட்டில் கல்வி தரமாக இருந்தது என்றும் அதற்குப்பின் தரமில்லை என்றும் புளுகியுள்ளார். அதன் சூட்சுமம், அக்காலத்தில் உயர்கல்விக்கு சம்ஸ்கிருதம் கட்டாயமாக்கப்பட்டிருந்தது என்பதும் சமூக நீதியின் அடிப்படையில் இட ஒதுக்கீடு இல்லை என்பதும் வெள்ளிடைமலை. உண்மையில் ஒன்றிய மனிதவள மேம்பாட்டத்துறை அளித்துள்ள புள்ளிவிவரங்களின்படி இந்தியாவின் தரமான கல்வி நிறுவனங்கள் 100ல் 37 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இருப்பது ஆளுநருக்குத் தெரியாதா? ஐ.ஐ.டி.யில் சென்னை ஐ.ஐ.டி. முதலிடம் வகிப்பதும் ஆளுநர் அறியாததா? கல்வித் தரம் தமிழ்நாட்டில் இல்லையெனில் சிறந்த மருத்துவர்கள் மூலம் சுகாதாரத்துறையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்க முடியுமா?

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஆளுநர் மாளிகையின் அத்துமீறிய செலவினங்களை நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் குறிப்பிட்டுப் பேசியதை விமர்சித்துள்ளார் ஆளுநர். ஆளுநர் மாளிகையில் சுதந்திர தினத் தேநீர் நிகழ்வில் 3000 பேர் பங்கேற்றதற்கு ஆன செலவினம் எனப் பசப்புகிறார்.

சட்டமன்றத்தில் தேசிய கீதம் பாடுவதற்கு முன்பே ஆளுநர் எழுந்து சென்றது குறித்து ஆளுநர் ரவி, டைம்ஸ் ஆப் இந்தியாவிற்கு அளித்த நேர்காணலில் தேசிய கீதத்தை முதலிலேயே ஒலிபரப்பச் சொன்னதாகவும் அவ்வாறு ஒலிபரப்பவில்லையென்றும் தன் செயலை நியாயப்படுத்துகிறார். அப்படியெனில் ஆளுநர் வெளியேறுவது முன்கூட்டியே திட்டமிடப்பட்டது என்பது தெளிவாகிறது.

தமிழ்நாட்டு மக்கள் பிரிவினைவாதிகள் என்றும் சம்ஸ்கிருதம் உள்ளிட்ட வேறு மொழியை அனுமதிக்காதவர்கள் என்றும் அங்கலாய்த்துள்ளார் ஆளுநர் ரவி. ஆளுநர் மாளிகையின் அருகிலுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பிறமொழி நூல்கள் கற்கத் தனி தளம் அமைக்கப்பட்டுள்ளது ஆளுநருக்குத் தெரியாதா? மேலும் மதுரையில் அமையும் கலைஞர் நூலகத்தில் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியான நூல்கள் மட்டுமே இடம்பெற உள்ளதாக ஆதங்கப்படும் ஆளுநர் மூலம் அவரது உள்ளத்தில் சம்ஸ்கிருதம் ஆட்சி செலுத்தி வருவது தெரிகிறது. கர்நாடகா மாநிலத்தில் தமிழ் வாக்காளர்கள் மத்தியில் வாக்கு சேகரிக்கும் கூட்டத்தில் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை முன்னிலையில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலின் ஒலிபரப்பு துவங்கி பாதியிலேயே கர்நாடகா பா.ஜ.க. தலைவர் மூலம் நிறுத்தப்பட்டது குறித்த தமிழ்நாடு ஆளுநர் கள்ள மௌனம் சாதிப்பதேன்?

ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு அரசையும் தமிழர்களையும் தமிழையும் கொச்சைப்படுத்தி தொடர்ந்து ஆளுநர் ரவி மேற்கொண்டு வரும் அத்துமீறல்களையும் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விரோதமான நடவடிக்கைகளையும் இனியும் அனுமதிக்கலாகாது. சமூக வலைதளங்களில் ஆளுநருக்கு எதிராக மக்கள் காறி உமிழ்ந்த பிறகும் ஆளுநர் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கும் போக்கு அநாகரிகமானது. அவமானகரமானது. "மதியாதார் வாசல் மிதியாதே" என்பது தமிழர்களின் பண்பாடு. அதெல்லாம் ஆளுநருக்கு எங்கிருந்து தெரியப் போகிறது. ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் என ஊறிப்போன ஆர்.எஸ்.எஸ் ரவியாய் ஆளுநர் இருப்பதனால் ஆளுநர் பதவிக்கு ரவி லாயக்கற்றவர் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார். எனவே அவராகவே தமிழ்நாட்டிலிருந்து வெளியேறுவது நல்லது. ●

# ஒவ்வொரு வர்க்கப் போராட்டமும் ஓர் அரசியல் போராட்டமே!

**- தெ.வாசுகி**

02-07-2003 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் அறிவித்த 30-06-2023 அன்றே போராட்டத் தலைவர்களை இரவில் வீடுபுகுந்து காவல்துறை கைது செய்தது. போராட்டதை கைவிட்டு வேலைக்கு திரும்பவில்லையென்றால் டெஸ்மா பாயும் என்று அரசு மிரட்டியது. பெண்ஊழியர்கள் மீது விபச்சார வழங்கு போடுவோம் என்று மிரட்டினர். அரசு குடியிருப்புகளை காலி செய்யுமாறு மிரட்டியது. எஸ்மா சட்டத்தை திருத்தி பணிக்கு வராதவர்களை எவ்வித விசாரணையுமின்றி பணிநீக்கம் செய்ய அதிகாரிகளுக்கு ஆணவ அரசு அதிகாரமளித்தது. அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் போராட்டத்தில் தலைமைச் செயலக சங்கமும் வீறுகொண்டு இணைந்தது. அரசு ஊழியர்களை எஸ்மா, டெஸ்மா ஏவுகணைகளால் தாக்கி ஒழித்துவிட்டதாக கொக்கரித்து ருத்திரதாண்டவம் ஆடிய அரசிடமிருந்து சிஐடியு தொழிற்சங்கம் உச்ச நீதிமன்றம் வரை சென்று அரசு ஊழியர்களை ஆசிரியர்களை மீட்டெடுத்த எழுச்சி மிக்க வரலாற்றை நாம் படைத்துள்ளோம். நாடு விடுதலைப் பெற்றப் பின் சுதந்திர இந்தியாவில் நாடே இதுவரை சந்தித்திராத ஒற்றுமையுடன் வரலாறு காணாத அடக்குமுறைகளை சந்தித்து வீறுகொண்டு நடந்த மகத்தான போராட்டம். இந்த போராட்டம் வெறும் அரசுக்கும், அரசு ஊழியர்களுக்கும் என்று எண்ணிவிடக்கூடாது. உலக மயம் தனியார் மயம் தாராளவாத போக்கிற்கு ஆதரவாக ஆளும் வர்க்கம் அதிகார வர்க்கம், நிர்வாக எந்திரம், நீதிமன்றம் என அனைத்திற்கும் எதிரான போர் என நாம் நினைவில் கொள்ள வேண்டும். உலக தொழிற் சங்கங்கள் கண்டிராத அளவு 1,76,000 அரசு ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டு அத்தனை பேரும் மீள பணியமர்த்தப்பட்டு பீனிக்ஸ் பறவைபோல மீண்டெழுந்து வரலாறு படைத்தோம். தோழர் சுகுமால் சென் உலக தொழிற்சங்க மாநாட்டில் பதிவு செய்து நமது எழுச்சிப் போராட்டத்தினை உலகறியச் செய்தார். சகோதர தொழிற்சங்கங்களின் வர்க்க ரீதியான ஒத்துழைப்பு ஒரு போராட்டத்தை பாதுகாக்க எந்த அளவிற்கு அவசியமானது என உணர்த்திய போராட்டம். அடுத்து வந்த தேர்தலில் அ.திமுக அரசை தேர்தலில் மண்ணைக் கவ்வ வைத்த போராட்டம். ஒவ்வொரு வர்க்கப் போராட்டமும் ஓர் அரசியல் போராட்டமே என உலகுக்கு உணர்த்தியப் போராட்டம், அத்தகைய எழுச்சிமிக்க போராட்டத்தின் இருபதாம் ஆண்டு நிறைவு எழுச்சி நாள் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னதாக சரித்திர சிறப்புமிக்க நிகழ்வாக தோழர் எம். ஆர். அப்பன் பயிற்சிமைய வளாகத்தின் முகப்பில் நமது அமைப்பின் 40ஆம் மாணிக்க ஆண்டின் நினைவாக 40 அடியில் இரண்டு கொடிமரங்கள் அமைத்து 8 அடி நீளமும் 12 அடி அகலமும் கொண்ட கொடிகளுடன் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனக் கொடிமரம் பயிற்சி மைய வளாகத்தின் இடது புறமும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கொடிமரம் வலதுபுறமும் அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்தாபனத்தின் 40 ஆம் மாணிக்க ஆண்டு கல்வெட்டினை தமிழ்நாடு நில அளவை சங்கத்தின் மேனாள் பொதுச் செயலாளரும், செங்கல்பட்டு மண்ணின் மைந்தரும், அரசு ஊழியர் சங்கத்தின் மூத்த தோழருமான தோழர் கே.அறி அவர்களும், 20 ஆம் ஆண்டு எழுச்சி நாள் கல்வெட்டினை முதல் மற்றும் இரண்டாம் தலைமுறையுடன் பல போராட்டங்களைக் கண்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மேனாள் துணைத்தலைவர் தோழர் கே.எம் தியாகராஜன் ஆகிய இருவரும் சமநேரத்தில் கல்வெட்டுகளை திறந்து வைத்தார்கள். அதன் பின்னர் விண்ணதிர முழக்கங்களுடன் தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியை மாநிலத் தலைவர் மு. அன்பரசு அவர்களும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் பதாகையை பொதுச் செயலாளர் ஆ. செல்வம் அவர்களும் சமநேரத்தில் கொடியேற்றி வைத்தார்கள். சிஐடியு மாநிலத் தலைவர் தோழர் அ. சௌந்தரராசன் அவர்களும் தமிழ்நாடு முழுவதும் வந்த தோழர்களுடன் உணர்ச்சி பொங்க முழக்கமிட்ட காட்சி ஒரு எழுச்சி பேரலையை அங்கே உருவாக்கியது. அனைவரும் முழக்கமிட்டவாறு எழுச்சிநாள் கூட்ட அரங்கில் அமர்ந்தனர்.

ஜூலை -2 எழுச்சி நாளின் இருபதாம் ஆண்டு நிறைவு எழுச்சி நாள் கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் மு.அன்பரசு தலைமையேற்றார். “காலத்திற்கேற்ற போராட்டங்களை கட்டமைக்கவும், இழந்த உரிமைகளை மீட்டெடுக்கும் உறுதியுடன்” எழுச்சிநாள் கூட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாணிக்கமாய் திகழ்கின்ற முன்னாள் மாநில மாவட்ட நிர்வாகிகளையும், மாநில நிர்வாகிகளும் போர்ப்படை வீரர்களாய் திகழ்கின்ற மாநில செயற்குழு உறுப்பினர்களையும், மாவட்ட, வட்டக்கிளை, அலுவலக மையம் அலுவலக வளாக மையம் மற்றும் முன்னணி வீரர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரையும் துணைப்பொதுச் செயலாளர் தெ.வாசுகி வரவேற்றார். “2003ல் அடக்குமுறைகளை எதிர்கொண்டதும் நிகழ்காலச் சவால்களும்” என்ற தலைப்பில் பொதுச் செயலாளர் ஆ, செல்வம் பொருளுறையாற்றினார். மேனாள் மாநிலத் தலைவர் நெ.இல. சீதரன் மற்றும் மேனாள் மாநிலச் செயலாளர் அ. இராஜாபாதர், தலைமைச் செயலக சங்கத்தின் தலைவர் கு.வெங்கடேசன், மேனாள் மாநில பொருளாளர்கள் என்.இளங்கோ, வி.தேவன், வே.கணபதி எம்.தங்கராசு ஆகியோர் எழுச்சிநாள் உரையாற்றினார்கள் “ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் கொள்கைகளும் உழைக்கும் வர்க்கம் சந்திக்கும் சவால்களும்” என்ற தலைப்பில் சிஐடியு மாநிலத் தலைவர் தோழர் அ .சவுந்தரராசன் சிறப்புரையாற்றினார். மாநிலப் பொருளாளர் மு.பாஸ்கரன் நன்றியுரை கூறியவுடன் செங்கல்பட்டு மாவட்ட மையம் சார்பில் எழுச்சி நாள் கூட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் இரவு உணவு அன்புடன் வழங்கி வழியனுப்பி வைத்தனர். ●

சொந்த நாட்டு மக்களுக்கு
சோறு போடவே வக்கில்லை
தானியற்றிய சட்டங்களை
கடைபிடிக்கவே துப்பில்லை
ஜனநாயகம் உயிர்வாழ
உடம்பிலேயே இடமில்லை
கடைசியில்
உன்னைத் தூக்கி நடக்க
உனக்கே தெம்பில்லை
இற்று விழக் காத்திருக்கும்
இந்த லட்சணத்தில்
கம்யூனிசம் தோற்றதாம்!

# தேசிய கல்விக் கொள்கையும் – பாதக விளைவும்

**– இரா.மங்களபாண்டியன்**

தேசிய கல்விக் கொள்கை 2020ஐ, ஒன்றிய அரசு ஜூலை 2020 முதல் அமல்படுத்த தீவிரமாக முனைப்பு எடுத்து வருகிறது. குறிப்பாக கல்லூரிக் கல்வியில் அதன் திட்டங்களைச் செயல்படுத்த பல்கலைகழக மானியக்குழு (யுஜிசி) என்ற அமைப்பைப் பயன்படுத்தி நேரடியாகக் கல்லூரிகளுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் சுற்றறிக்கைகள் அனுப்பி அதன் மூலம் அமல்படுத்தி வருகிறது.

தற்போது தேசியக் கல்விக் கொள்கையின் பல பரிந்துரைகளை தனியார் பல்கலைக்கழகங்கள், சுயநிதிக் கல்லூரிகள், தன்னாட்சி கல்லூரிகள் அமல் படுத்தி வருகின்றன. பல தனியார் பல்கலைக்கழகங்கள் மருத்துவம், விவசாயம், சட்டம், கல்வியியல் உள்ளிட்ட பல்வேறு நிறுவனக் கல்வியை வழங்கும் நிறுவனங்களாக மாறிவிட்டன. நான்காண்டு பட்டப் படிப்புகளையும் துவக்கி இடையிலேயே விலகி சர்ட்டிபிகேட், டிப்ளமோ, பட்டம் எனப் பெறலாம் என அறிவித்து பல துறைகளை நடத்தி வருகின்றன. தன்னாட்சிக் கல்லூரிகளிலும் இந்த முறை அமலாகி வருகிறது. தேசிய கிரெடிட் திட்டத்தையும் அமல்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு அரசோ, உயர்கல்வித் துறையோ, தமிழ்நாடு உயர்கல்வி மன்றமோ, பல்கலைக்கழகங்களோ இதனைக் கண்டு கொள்ளவில்லை.

தற்போது நவம்பர் 18, 2021 தேதியிட்ட-நேரடிக் கடிதம் மூலம் கீழ்க்கண்ட திட்டங்களை அமல் படுத்த பல்கலைக்கழகத் துணை வேந்தர்களுக்கு ஒன்றிய அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது. தேசியக் கல்விக் கொள்கையின் முக்கிய நோக்கமான தரமான கல்வி மூலம் உலகளவில் அறிவு வல்லரசாக திகழ்வதற்கு உயர்கல்வி நிறுவனங்கள் அதிக ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும். பல கல்வி நிறுவனங்கள் தாமாகவே முன்வந்து தேசியக் கல்விக் கொள்கையினை அமல்படுத்தி அதன் நோக்கங்களை செயல்படுத்தி வருகின்றன. எனவே, தேசிய கல்விக் கொள்கையினை அமல்படுத்த ஒரு சிறப்பு அமைப்பை உருவாக்கி தொடர்ந்து ஒரு கால அட்டவணையுடன் முன்னேற்றங்களை கண்காணித்து வர வேண்டும் என அலுவலகக் கடிதம் அனுப்பியுள்ளது. இதில் முக்கியமான ஆபத்தான பரிந்துரைகளை பார்ப்போம்.

**தேசிய மதிப்பெண் வங்கி**

மாணவர்களுக்கு கிரெடிட் வழங்கும் முறையில் தேசிய அளவில் ஒரு மதிப்பெண் வங்கி உருவாக்கி உள்ளனர். இந்த கிரெடிட் மதிப்பெண் முறை என்பது ஏற்கனவே பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் சுய தெரிவு மதிப்பெண் பெறும் முறை (சாய்ஸ் பேஸ்டு கிரெடிட் சிஸ்டம்) என்ற முறையில் அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால்

அது பெரும் தோல்வியைச் சந்தித்து வருகின்றது. தற்போது அகில் இந்தியி அளவில் கிரெடிட் சேமிப்பு விநியோகம் என்பது பெரும் கேலித்கூத்தாக அமையும். மேலும் அகில இந்திய அளவில் ஆன்லைன் மூலம் படிக்கும் படிப்புகளுக்கு அகில இந்திய கிரெடிட் கிடைக்கும். ஆன் லைன் வகுப்புக்களைப் படிப்பதற்கும் பாடத் திட்டமும் அதற்குரிய கட்டணமும் பாடம் நடத்துபவரே தீர்மானதித்துக் கொள்ளலாம் என்பதால் கிராமப்புற மாணவர்களுக்கு இது பெரும் சவாலாக அமையும். மேலும் ஸ்வயம் என்ற போர்டல் மூலம் ஆன்லைன் கல்வி பெறுவதை 20 சதவீதத்திலிருந்து 40 சதவீத அளவிற்கு உயர்த்தலாம் என்ற பரிந்துரை முறையான வகுப்பறைக் கல்வியை முடக்கும் முயற்சியாகும்.

**சேர்தல்-விலகுதல்-சேர்தல் முறை**

பட்டப்படிப்பில் பல முறை சேர்ந்து பல முறை விலகும் வாய்ப்பு மாணவர்களுக்கு கொடுக்கும் கல்வி என்பது செத்துச் செத்துப் பிழைப்போம் வா என்பது போன்றதுதான். ஒரு முறை கட்டணம் செலுத்தி படித்து முடித்து வரும் முறையில் உள்ள வாய்ப்புகளை இது ஒழிக்க நினைக்கிறது. அதாவது இன்று தமிழகத்தில் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி என்றிருக்கும் போது அந்த கட்டமைப்பை இது சிதைத்து விடும். ஓவ்வொரு முறையும் சேர்ந்து விலகும் போதோ அல்லது வெவ்வேறு கல்லூரிகளில் விலகிச் சேரும் போதோ யார் கட்டணம் கட்டுவது? வெவ்வேறு படிப்புக்கும் உள்ள கட்டணங்கள் வெவ்வேறாகவும் உயர்த்தியும் அமைக்கப்படும் போது ஏழை மாணவர்களின் நிலை என்ன? விலகி விலகிச் சேர்ந்து படிப்பது என்பது உயர்கல்வியில் சுனாமி போன்றது மாணவர்களின் இடை விலகல் நடைபெறும்.

**தொலைதூர, ஆன்லைன் கல்வி முறைத் தீவிரம்**

இன்னும் பத்து வருடங்களில் உயர்கல்வி சேர்க்கையை 50 சதவீத உயர்த்த வேண்டும் என மார்தட்டிக் கூறிவிட்டு இப்பொழுது அதற்கு தேவையான உயர்கல்வி நிலையங்களை அதிகரிக்காமல் தொலைதூரக் கல்வி, ஆன்லைன் கல்வி எனப்பேசுவது ஒன்றிய அரசின் உண்மையான முகத்தைக் காட்டுகிறது. தொலைதூரக்கல்வி, ஆன்லைன் கல்வி மூலம் உயர் கல்வியில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் குள்ளநரித்தனமான வேலை இது ஆகும். தேசியக் கல்விக் கொள்கை தரமான கல்வியை வழங்கும், மனித வளக் குறியீட்டை அதிகரிக்கும் என பேசும் இந்நாள், முன்னாள் துணைவேந்தர்கள் தான் இந்த முறையிலான உயர்கல்விச் சேர்க்கைக்குப் பதில் சொல்ல வேண்டும்.

**உயர்கல்வியை சர்வதேசமயமாக்கல்**

உயர் கல்வியை சர்வதேசமயமாக்க பல்கலைக்கழகங்களில் தனி அமைப்பை உருவாக்க வேண்டும் என்பது அந்நியப் பல்கலைக்கழகங்கள் உள்ளே நுழைவதற்கு பச்சைக் கொடி காட்டப்படும் திட்டம் ஆகும். அந்நியப் பல்கலைக் கழகங்களின் துறைகள் உள்ளே வருவதும், அதன் மூலம் உள்ளூர் துறைகள் மூடப்படுவதும் நடைபெறும். அந்நிய நாட்டுப் பேராசிரியர்கள் மூலம் வகுப்புகள் நடைபெறும், நம் நாட்டுப் பேராசிரியர்கள் ஓரம் கட்டப்படுவர், அந்நிய நாட்டுப் பல்கலைக்கழக படிப்புகளுக்கு மாணவர் சேர்க்கும் அமைப்பாக உயர் கல்வி நிறுவனங்கள் மாறிவிடும். உயர் கல்வி நிலையங்களை சர்வதேசமயமாக்குதல் என்பது உலக வர்த்தக நிறுவனத்தின் கட்டளை ஆகும். இதை ஒன்றிய அரசு அடி பணிந்து சாசனமாக நமக்குத் தருகிறது.

### நிறுவனங்கள் தரமேம்பாடு

தர மேம்பாடு குறித்த வழிகாட்டலில் ஏன் இத்தனை வகையான சமஸ்கிருத வார்த்தைகள்? உயர் கல்வி நிறுவனங்கள் தாங்களாகவே தரம் உயர்த்தும் வழி காட்டுதலில் ஆசிரியர், மாணவர்களைத் தயார்படுத்துதல் என்பது காலங்காலமாக எல்லா உயர் கல்வி நிலையங்களிலும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன, புதிதாக சேரும் ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழகங்களிலும் மாணவர்களுக்கு கல்லூரிகளிலும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. ஒரு காலத்தில் இலவசமாக இது நடந்து கொண்டிருந்தன. தற்போது இதற்கென கட்டணம் கட்டும் நிலைக்குச் சென்றுள்ளது தற்போதைய வழிகாட்டுதல் என்பது தர மேம்பாட்டுப் புள்ளிகளுக்காக என்பதால் இது கட்டண உயர்வுக்கு வழி வகுக்கும்.

### சேவை மனப்பான்மை

மாணவர்களுக்கு சேவை மனப்பான்மையை தேசிய சேவை திட்டம் மூலம் உருவாக்கி வந்தனர். தற்போது அது நிதிப் பற்றாக்குறையால் முடங்கியுள்ளது. ஆனால் இதை மாணவர்களுக்கு வழங்கவேண்டும் எனப் பரிந்துரைக்கிறது.

### அனைத்தும் நிதி சார்ந்தது

அடிப்படைக் கட்டமைப்பு உட்பட சுயமான தர உயர்வு வழிகாட்டும் திட்டங்கள் யாவும் நிதி சார்ந்த செயல்படுகளாகும். இதனைப் பயன்படுத்தி சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் மாணவர்களிடம் கொள்ளை அடிக்கவும் அரசு, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் பின்தங்கி தரந்தாழ்ந்து விட்டன என மதிப்பீடு செய்வதற்கு மட்டுமே உதவி செய்யும். மொத்தத்தில் உயர்கல்வி கொடுப்பதில் இருந்து அரசு விலகிக் கொள்வதற்கும் முழுக்க முழுக்க வணிகமயத்திற்கும், சுயநிதிக் கல்லூரிகள் கொடி கட்டிப் பறப்பதற்கும், பல்கலைக்கழக மானியக்குழுவின் பரிந்துரை ஆவண செய்கிறது. எனவே தமிழ்நாடு அரசு தேசியக் கல்விக் கொள்கையை நிராகரித்து உள்ள சூழலில், பல்கலைக் கழக துணைவேந்தர்கள் இதை அமல்படுத்தக் கூடாது எனவும் சுயநிதிக் கல்லூரிகளும், தன்னாட்சிக் கல்லூரிகளும், தனியார் பல்கலைக் கழகங்களும் அமல்படுத்தும் சூழலில் தமிழ்நாடு அரசு உடனே தடுத்து நிறுத்த வேண்டும். ●

புதுசு புதுசாய்
எதை எதையோ
வேண்டும் மனம்
புரட்சியை வேண்டாதா என்ன!
புரட்சி வேண்டுமா வா...
அதற்கு முயற்சி வேண்டும்
முன்னேற அமைப்பு வேண்டும்
யாருக்காகவோ வேலை செய்யும்
உழைக்கும் வர்க்கமே
உனக்கான ஒரே வேலை
புரட்சி மட்டுமே!

சட்டம் யாவர்க்கும்
சமமெனும் பேச்சு

கிட்டே சென்றால்
கிழிந்திடும் போச்சு

திட்டம் ஒன்றினைத்
தீட்டிட வேண்டும்

நீட்டிய திசையெலாம்
நீதியின் ஆட்சி !!

# மாணிக்க ஆண்டின் மங்கா நினைவுகளும் எழுச்சி நாள் கூட்டத்தின் புரட்சி நிகழ்வுகளும்!

**- கோ.சுகுமார்**

ஜூலை 2 2023 ஆம் ஆண்டு அன்று செங்கல்பட்டில் உள்ள பயிற்சி வகுப்புக்கான வாங்கப்பட்ட நிலத்தில் நடைபெற்ற 20 ஆண்டுகள் நிறைவு எழுச்சி நாள்

நிகழ்வும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு துவக்க மாணிக்க விழாவும் வெகு சிறப்பாக நடைபெற்றது இந்நிகழ்வில் பங்கேற்று நினைவில் நின்ற சிலவற்றை பதிவிடுகிறேன்.

2003 ஆம் ஆண்டு நடைபெற்ற அரசு ஊழியர் ஆசிரியர் வேலை நிறுத்தத்தின் போது அரசு வரலாறு காணாத அடக்குமுறைகளை கையாண்டது. அரசு ஊழியர் ஆசிரியர்களை டிஸ்மிஸ் செய்தது. பழிவாங்கப்பட்ட ஊழியர்களை பாதுகாத்திட தமிழக மட்டுமின்றி இந்திய நாடு முழுவதும் பல்வேறு மாநில அரசு ஊழியர்கள் பாதுகாப்பு நிதி வழங்கியதில் மீதி இருந்த தொகையில் அரசு ஊழியர் மாணவர்களுக்கான பயிற்சி பள்ளி கட்டிட தற்சமயம் செங்கல்பட்டில் உள்ள நிலம் 2013 ஆம் ஆண்டு வாங்கப்பட்டது அதன் பின்னர் எவ்வித நடவடிக்கையும் இன்றி 10 ஆண்டுகள் கடந்தது.

இந்நிலையில் இன்றைய மாநில நிர்வாகிகள் திடீரென முடிவு செய்து வாட்ஸ் அப் மூலம் 2023 ஜூலை 2 அன்று செங்கல்பட்டில் உள்ள பயிற்சி பள்ளிக்கான கட்டிட நிலத்தில் 20 ஆண்டுகள் நிறைவு எழுச்சி நாள் மற்றும் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு துவக்க மாணிக்க விழாவும் இணைந்து நடத்துவது எனவும் இதில் அனைத்து மாநில மாவட்ட நிர்வாகிகள் மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றிட அழைப்பு விடுக்கப்பட்டது நான் கூட இது சாத்தியமாவென யோசித்தேன் ஆனால் அங்கு வந்த பின் திகைத்துப் போனேன் காரணம் மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களில் இருந்து 300க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றதும் முகப்பு முதல் விழா நடைபெறும் இடம் வரையிலான ஏற்பாடுகள் வெகு சிறப்பாக இருந்தது கட்டிட வளாகத்தின் முகப்பில் இரண்டு கல்வெட்டுகள் மற்றும் மிக பிரம்மாண்டமான இரண்டு 40 அடி உயர கோடி மரம் அதற்கு ஏற்ப கொடிகள் அனைவரையும் வெகுவாக கவர்ந்தது அரங்க ஏற்பாடுகளும் சிறப்பாக இருந்தது.

அதே வேளையில் மாலை மாநில செயற்குழுவையும் நடத்தி இரண்டு அறைகூவல் தீர்மானங்கள் மற்றும் பயிற்சி கட்டிடம் துவங்கிட துவக்க பணிக்கான முடிவுகள் அனைத்தும் பாராட்டும் விதமாக இருந்தது.

இவ்விழாவின் துவக்க நிகழ்வாக விண்ணதிர கோஷங்களுடன் நமது சங்க பதாகைகளை மாநில தலைவரும் பொது செயலாளர் ஏற்றிட அனைவரின் கவனத்தையும் வெகுவாக இருப்பதாக இருந்தது.

கூட்டத்தின் துவக்கத்தில் மாநில துணை பொது செயலாளர் தோழர். வாசுகி அவர்களின் வரவேற்புரை துவக்க உரை போல் வெகு சிறப்பாக இருந்தது நேரமின்மையின் காரணமாக மாநில தலைவர் தோழர் மு.அன்புரசு அவர்களின் பேச்சு சுருக்கமாக இருந்தாலும் இன்றைய தேவை குறித்து விடுதலின்றி சிறப்பாக இருந்தது மாநிலத் துணைத் தலைவர்கள் அனைவரும் சிறப்பாக அறிமுக உரையினை நிகழ்த்தினார்கள்.

தீர்மானங்களை விளக்கி பொதுச் செயலாளர் தோழர் ஆ. செல்வம் அவர்கள் எழுச்சி உரை அவருக்கே உரிய பாணியில் உடல் நிலையும் கணக்கில் கொள்ளாமல் சிறப்பாக இருந்தது மேனாள் மாநில பொருளாளர்கள் அனைவரும் தமது கடந்த கால அனுபவங்களுடன் சிறப்பான கருத்துக்களை பதிவு செய்தனர்

அதே வேளையில் மேனால் மாநில செயலாளர் தோழர் ராஜா பாதர் அவர்களின் பேச்சு அனைவரையும் வெகுவாக கவர்ந்தது மேலும் மேனாள் மாநில தலைவர் தோழர் நெ. ல. ஸ்ரீதரன் அவர்களின் கடந்த கால நிகழ்வுகள் குறித்து உரையும் சிறப்பாக இருந்தது இறுதியாக பேசிய இந்திய தொழிற்சங்க மையத்தின் மாநில தலைவர் தோழர் அ. சௌந்தரராஜன் அவர்களின் எழுச்சி உரை வழக்கம் போல் வெகு சிறப்பாக இருந்தது மட்டும் இன்றி இந்திய தேசத்தை பாதுகாத்திட 2024 இல் நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் நமது பங்கு குறித்து அவரின் தெளிவுரை நாம் அனைவருக்கும் உணர்த்துவதாக இருந்தது இந்நிகழ்வில் பங்கேற்ற அனைத்து தோழர்களும் ஏதோ ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வில் பங்கேற்ற மகிழ்வுடன் தமது எதிர்கால கடமைகளை உணர்ந்து மிகுந்த மகிழ்ச்சியுடன் சென்றனர் என்றால் மிகையாகாது. ●

## திரிபுராவில் பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்பு

**– தீக்கதிரோன்**

திரிபுரா சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் பாஜக வெற்றி பெற்றதில் இருந்து மாற்றுத் திற னாளிகள், பழங்குடியின பெண்கள் மற்றும் இளம் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள், கும்பல் வன்முறைகள் அதிகரித்துள்ளன என்று அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் அதிர்ச்சியும், கண்டனமும் வெளியிட்டுள்ளது.

*2023 ஏப்ரல் 15 முதல் ஜூன் 1 வரை 45 நாட்களில் பெண்க ளுக்கு எதிரான 12 பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவாகியுள்ளன.*

ஏற்கெனவே திரிபுராவில் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் எம்எல்ஏ நிர்மல் பிஸ் வாஸ், 2022ல் திரிபுரா சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பியபோது, உள்துறை அமைச்சரும், தற் போதைய மாநில முதல்வருமான மாணிக் சாஹா சமர்பித்த அறிக்கையில் 2020 முதல் 400 க்கும் மேற்பட்ட பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறை வழக்கு கள் பதிவு செய்யப்பட்டுள்ளன; ஏழு பெண்கள் பாலியல் வல்லுறவு செய்து கொலை செய்யப் பட்டுள்ளார்கள்; பாலியல் பலாத்காரம் உள்ளிட்ட பெண்களுக்கு எதிரான வன்முறை செயல்களில் 1,174 நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர் என தெரிவித்திருந்தார். அத்துடன் ஒப்பிடும் போது, தற்போது நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. ‘‘இது பாஜக ஆட்சியில் பெண்களுக்கு பாது காப்பில்லை என நிலைமையின் தீவிரத்தை அடிக்கோடிட்டு காட்டுகிறது. குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும். குற்றவாளிகளுக்கு எதிராக எடுக் கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்கவும் உண்மை கண்டறி யும் குழுவை அமைத்து வழக்குகளை விசா ரிக்கவும் வேண்டும்’’ என்று மாநில மகளிர் ஆணையத்திற்கு அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

# இந்திய ரயில்வேயின் சீர்குலைவுக்கு காரணம் ஒன்றிய அரசின் உச்சக்கட்ட அலட்சியமே!

**– தீக்கதிரோன்**

புதுதில்லி, ஜூன் 7- ரயில்வே நிர்வாகத்தில் குறைபாடுகள் அதிகம் உள்ளன என கடந்தாண்டே (2022) கவலை எழுப்பிய சிஏஜி அறிக்கையை ஒன்றிய மோடி அரசு கண்டுகொள்ளாத தன் விளைவுதான் ஒடிசா விபத்துக்கு காரணமாக அமைந்துள்ளது என்ற விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஒடிசா மாநிலம் பாலசோர் அருகே கோரமண்டல் எக்ஸ்பிரஸ் 3 ரயில்கள் அடுத்தடுத்து மோதிய விபத்தில் 288 பேர் பலியானார்கள். நாட்டையே உலுக்கிய இந்த சம்பவத்தில் விபத்து நடந்து நான்கு நாட்களாகியும் விபத்திற்கான உண்மையான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. தற்போது சிபிஐ விசாரணை துவங்கி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் போதிய பணியாளர்கள் இல்லாதது, தண்டவாளங்களைப் புதுப்பிக்காதது, முன்னுரிமை அடிப்படையில் ரயில்வே நிதியைப் பயன்படுத்தாதது, விபத்துகளுக்குப் பிறகு விசாரணை அறிக்கைகளை சமர்ப்பிக்கவோ அல்லது ஏற்கவோ தவறியது மற்றும் ஆய்வுகளில் கடுமையான குறைபாடுகள் ஆகியவை தீவிரமான கவலைகளாக இருப்பதாக கடந்த 2022இல் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (சிஏஜி) அறிக்கை வெளியிட்ட அறிக்கை யை உற்றுநோக்கினால் ஒடிசா விபத்திற்கு ஒன்றிய மோடி அரசின் அலட்சியமே காரணம் என்பதை உறுதி செய்ய முடிகிறது.

சிஏஜி சுட்டிக்காட்டிய குறைபாடுகள்

1. ஏப்ரல் 2017 முதல் மார்ச் 2021 வரை 422 முறை தடம் புரண்டுள்ளன. மோசமான பாதை பராமரிப்பு, அதிக வேகம் மற்றும் இயந்திரக் கோளாறு காரணமாகவே இவை தடம் புரண்டுள்ளன.

2. டிராக் ரெக்கார்டிங் கார்கள் மூலம் ரயில் தண்ட வாளத்தின் வடிவியல் மற்றும் கட்டமைப்பு நிலைக்கானஆய்வு செய்யும் பணிகளில் 30-100% வரை குறைபாடு உள்ளது.

3. ரயில் வழித்தட பராமரிப்பு பணிகளை (டிஎம்எஸ் - TMS) ஆன்லைன் மூலமாக கண்காணிக்க முடியும்.ஆனால் டிஎம்எஸ் கண்காணிப்பு நடைமுறை ஒழுங்காக செயல்படவில்லை. டிஎம்எஸ் இயந்திரங்கள்

செயலிழந்திருப்பது, பணியாளர்கள் இல்லாதது (5%), செயல்பாட்டு சிக்கல்கள் (19%), பிரிவுகளால் திட்டமிடப்படாத தொகுதிகள் (30%), இயக்கத் துறையால் கொடுக்கப்படாத தொகுதிகள் (32%). ஆகியவற்றால் ரயில் வழித்தட பராமரிப்பு பணியில் மந்தமான நிலை உள்ளது.

4. கடந்த 2017 முதல் 2021 மார்ச் வரை பொறியியல் குறைபாடு காரணமாகவே, 400-க்கும் மேற்பட்ட ரயில் தடம் புரண்ட சம்பவங்கள் அரங்கேறியுள்ளன. இதில் தண்டவாளங்களை முறையாக பராமரிக்காததால் 171 முறை ரயில்கள் தடம் புரண்டுள்ளன.

5. மெக்கானிக் துறையின் குறைபாடு காரணமாக 182 முறை ரயில்கள் தடம் புரண்டுள்ளன. சக்கர விட்டம் மாறுபாடு, பெட்டிகளில் உள்ள குறைபாடுகள் ஆகியவை தடம் புரண்டதற்கு 37% பங்களிப்பாக உள்ளன.

6. ஆப்பரேட்டிங் துறையின் தவறு காரணமாக 275 முறை ரயில்கள் விபத்துக்குள்ளாகின.

7. லோகோ பைலட்டின் (ரயில் ஓட்டுனர்) தவறு காரணமாக 154 முறை ரயில்கள் விபத்தில் சிக்கியுள்ளன. ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக மற்றும் லோகோபைலட்டுகளின் நீண்ட நேர வேலை அழுத்தங்களே இத்தகைய விபத்துக்கள் அதிகரித்து வருவதற்கு முக்கிய காரணம் என்று தெரிகிறது.

8. ரயில் விபத்து தொடர்பான 63% சம்பவங்களில் இன்னும் ஆய்வறிக்கை சமர்ப்பிக்கவில்லை. 49 சம்பவங்களில் அறிக்கையை ஏற்பதில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் தாமதம் செய்துள்ளனர். புரியும்படி சொன்னால் 16

ரயில்வே மண்டலங்களில் நிகழ்ந்த தடம் புரண்ட விபத்துகள் பற்றிய 1,129 வழக்குகளில் விசாரணை அறிக்கைகளை ஆய்வு செய்த பின்பு 23 காரணங்கள் கண்டறியப்பட்டன. இந்த 23 காரணங்களில் முக்கிய காரணியாக இருப்பது தண்டவாளங்கள் பராமரிப்பின்றி (தடம்) இருத்தல் ஆகும். தண்டவாளங்களை பராமரிப்பின்றி வைத்திருப்பது தொடர்பாக 171 சம்பவங்கள், வரம்பு மீறி பாதையில் விலகல் தொடர்பாக 156 சம்பவங்கள், கவனமின்றி ரயில்களை ஓட்டுதல் மற்றும் தண்டவாளத்தின் தன்மையை மீறி அதிக வேகமாக ரயில்களை இயக்குதல் தொடர்பாக 154 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

9. விதிமுறைகள் மற்றும் ஒருங்கிணைந்த உத்தரவுகள், பல்வேறு துறைகள் இடையேயான தொடர்பு, உரிய ஆய்வு ஆகியவற்றை முறையாக மேற்கொள்ளாததே பெரும்பாலும் ரயில் தடம் புரளும் சம்பவங்களுக்கு காரணமாக அமைகின்றன.

10. தண்டவாளங்கள் புனரமைப்பு பணிக்கு 2018 - 19-இல் ரூ.9607.65 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில், 2019-2020-இல் ரூ.7417 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டது. தண்டவாள புனரமைப்பு பணிக்காக ஒதுக்கப்பட்ட குறைந்த தொகையும் கூட முழுமை யாக பயன்படுத்தவில்லை. 2017 முதல் 21 வரையிலான காலகட்டங்களில் ரயில் தடம் புரண்டதில் 26% தண்டவாளங்கள் முறையாக பராமரிக்கப்படாததன் காரணமாகவே நிகழ்ந்தன.

11. 27,763 ரயில் பெட்டிகளில் (62%) தீயை அணைக்கும் கருவிகள் வழங்கப்படவில்லை.

12. கடந்த ஆண்டு (2021-22) 35 விபத்துக்கள் பதிவாகிய நிலையில், 2022-23 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக 48 ரயில் விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன. 2022-23இல் நிகழ்ந்த உயிர், சொத்து இழப்பு என ரூ.32.96 கோடி அளவில் ரயில்வே துறைக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

13. ராஷ்ட்ரிய ரயில் சுரக்சா கோஷ் (RRSK) என்ற பெயரில் 2017 முதல் 2018 வரை 20,000 கோடி ரூபாயில் நிதியம் உருவாக்கப்பட்டது. இந்த திட்டத்திற்கான நிதி ஐந்தாண்டுகளில் ரூ.1 லட்சம் கோடியாக வளர வேண்டும். ஆனால் குறைந்த அளவு நிதி ஒதுக்கீடு காரணமாக வெறும் ரூ.15,775 கோடி மட்டுமே உள்ளது.ரயில்வே துறையில் இவ்வளவு குறைபாடுகள் இருப்பதை ஓராண்டுக்கு முன்னரே சிஏஜி அறிக்கை மூலம் எச்சரிக்கை விடுத்திருந்தது. ஆனால் எச்சரிக்கையை கண்டுகொள்ளாமல் மோடி அரசு அலட்சியமாக இருந்ததன் விளைவாக ஒடிசாவில் 288 உயிர்களை காவு வாங்கியுள்ளது. ●

வந்துவிடுமோ

என்ற ‘பயம்’

முதலாளித்துவம்;

‘வருவோம்’

என்ற துணிவு

சோசலிசம்!

# வரலாற்றுப் படையின் 40 ஆம் மாணிக்க ஆண்டும், 2003 ஜூலை 2 எழுச்சி நாள் 20 ஆம் ஆண்டு நிறைவும்.

**– கே.எம். தியாகராஜன்**

*வரலாற்றுப்படையின் மாணிக்க ஆண்டும் 2003-ஜூலை 2 எழுச்சி நாள் 20ஆம் ஆண்டு நிறைவும் சங்கத்தமிழ் நூலான பத்துப்பாட்டில் 'ஆற்றுப்படை' என்ற பாட்டு வகையும் அடங்கும். 'ஆறு' என்ற சொல் இங்கே நீரோடும் ஆற்றை குறிக்காது. ஆறு என்பதன் பொருள் 'வழி' என்பதாகும். 'படை' என்றால் 'படுத்துதல்' என பொருள் படும். ஆற்றுப்படை என்றால் வழிப்படுத்தல் அல்லது வழிகாட்டல் என்பதே பொருள்.*

*படை என்பது போர்ப்படையையும் குறிக்கும். வருங்கால வரலாற்றை படைக்க வேண்டும் என்ற விழைவும் 'வரலாற்றுப்படை' என்ற பெயருக்கு பொருளாகவும் இருக்கிறது.*

*அதைப்போல தமிழகத்தில் அன்றைக்கான சங்க அமைப்பு, ஊழியர்களின் நலன் பேணாமல், சங்க ஜனநாயகத்தை வேரறுத்து, கோரிக்கைகளுக்காக குரல் கொடுக்காமல் ஆளும் வர்க்கத்திற்கு ஆலவட்டம் சுழற்றும் அடிவருடிகளாய் சரணாகதி அடைந்த காலத்தில், ஊழியர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க சமரசமின்றி போராட போர்க்குணமிக்க சமூகப்பார்வையுடன் கூடிய அமைப்பாக 1984 –மே ஆறாம் நாள் நமது சங்க வரலாற்றுப்படை உதயமானது.*

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 40 ஆம் ஆண்டு மாணிக்க விழாவும், ஓய்வூதியம் உள்ளிட்ட பல உரிமைகளும், சலுகைகளும் 2003ல் ஐந்து அரசாணைகள் மூலம் பறிக்கப்பட்டதை எதிர்த்து களம் கண்டு, வீரச்சமர் புரிந்த 2003 ஜூலை 2 எழுச்சிநாள் நிறைவு கூட்டமும் 2023 ஜூலை 2 அன்று மாலைப்பொழுதில் செங்கல்பட்டு திம்மாவரத்தில் உள்ள நமது சங்கத்திற்கு சொந்தமான இடத்தில் எழுச்சியோடு நடைபெற்றது.*

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 2013ஆம் ஆண்டு செங்கற்பட்டில் வாங்கிய இடத்தில், இந்த இருபெரும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றது சங்க வரலாற்றில் புதிய தொரு ஒரு மைல்கல்லாகும்.*

*2013ல் வாங்கி, புதர் மண்டி, கருவைக்காடாய் இருந்த இடத்தில் 2023 ஜூலை 2ல் எழுச்சி நாளையும், 40வது மாணிக்க ஆண்டு விழாவையும் நடத்த முடிவெடுத்த பின்னணியில் குறுகிய நாட்களில் அந்த இடத்தை சீர்படுத்தி, சமப்படுத்தி திறந்த வெளி அரங்கமாக மாற்றப்பட்டது பாராட்டுக்குரியது.*

*40ஆம் மாணிக்க ஆண்டு நினைவாக கல்வெட்டும், ஜூலை 2 எழுச்சி நாள் 20ஆம் ஆண்டு நிறைவாக ஒரு கல்வெட்டும் பிரமாண்டமாய், பலவண்ணத்தில், இலச்சினைகள் பொறிக்கப்பட்டது அழகாக இருந்தது.*

*வண்ணமயமான கல்வெட்டுகளின் பின்னால் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 40ஆம் மாணிக்க ஆண்டை நினைவுபடுத்தும் வகையில் 40 அடியில் உயர்தரமான நினைவு கொடி மரங்கள்*

இரண்டு அமைக்கப்பட்டிருந்தன. ஒன்று அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் (AISGEF) பதாகையும், இன்னொரு கொடி கம்பத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின்பதாகையும் ஏற்றுவதற்கு தயார் செய்யப்பட்டிருந்தன.

சங்கத்திற்கு சொந்தமான இடத்தில் கல்வெட்டு, கொடி மரங்களுக்கு எதிர்முனையில் நிகழ்ச்சிக்கான மேடை அமைக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற வரலாற்றுப்படையின் சிப்பாய்களை வரவேற்பது போல் கொடி மரத்தில் இருந்து மேடை வரை சிவப்பு கம்பளம் விரிக்கப்பட்டது செஞ்சேனையை வரவேற்பது போல் இருந்தது.

அரசியல் கட்சிகளுக்கு இணையான பிரமாண்டமாய் அமைக்கப்பட்ட கொடிகம்பத்தில் எழுச்சி முழக்கங்களோடு அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் பதாகையை பொதுச்செயலாளர் ஆ.செல்வம் அவர்களும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பதாகையை மாநிலத் தலைவர் மு.அன்பரசு அவர்களும் ஏற்றி வைத்தனர். கொடியேற்றும் போது பட்டொளி வீசி பறக்கட்டும் என முழக்கமிடுவோம். இந்த நிகழ்வில் தான் உண்மையிலேயே ‘பட்டொளி வீசி பறக்கட்டும்’ என்ற சொல்லுக்கு இலக்கணமாக இரண்டு இயக்க கொடிகளும் பறந்தன. இரண்டு கொடிகளும் அழகாக பறக்கும் போது இயக்கம் வளர்த்த தோழர்களை வாஞ்சையுடன் வரவேற்பது போலவும், உயிர்நீத்த தியாகிகளுக்கு செவ்வணக்கம் சொல்வது போல் உணர்வுபூர்வமாக இருந்தது.

பிரமாண்டமான, வண்ணமயமான 40ஆம் மாணிக்க ஆண்டு கல்வெட்டினை தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு முன்னாள் பொதுச்செயலாளர் க.அறி அவர்களும், 20 ஆண்டு ஜுலை 2 எழுச்சி நாள் நிறைவு கல்வெட்டினை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில துணைத்தலைவர் கே.எம்.தியாகராஜன் அவர்களும் கரத்த கரவொலிகளுடன், முழக்கங்களுடன்நடுவில் திறந்து வைத்தனர்.

40 ஆம் மாணிக்க ஆண்டு கல்வெட்டினை பார்க்கும் போது அரச ஊழியர் இயக்கத்தின் வரலாற்று படையான நமது சங்கம் கடந்த வந்த வரலாற்றுச் சுவடுகளை நினைவு படுத்தின. கற்களும் முட்களும் நிறைந்த கரடுமுரடான பாதையில் இயக்கப்பணியாற்றி இன்றைய இளைய தலைமுறைக்கு மலர்ப்பாதை அமைத்துக் கொடுத்துள்ளதை நினைவுபடுத்துகிறது. கண்ணீரும், செந்நீரும் சிந்தி வளர்த்த இந்த இயக்கம் ஏராளமான அடக்குமுறைகளை சந்தித்து, உயிர்த்தியாகம் செய்து சிறைகளை முத்தமிட்டு, 40 ஆண்டுகாலத்தில் அரசு ஊழியர்களுக்கான ஊதிய அகவிலைப்படி, போனஸ், உள்ளிட்ட மாற்றம் பல்வேறு உரிமைகளை பெற்றுத்தந்த வரலாற்றுப்படையின் தியாகங்களை புதிய தலைமுறைக்கு சொல்வதாக இருந்தது.

ஜுலை 2 எழுச்சி நாள் 20ஆம் ஆண்டு நிறைவு கல்வெட்டினை பார்க்கும்போது 5 அரசாணைகளை போட்டு நம்மிடம் இருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை மீளப்பெற ஜுலை 2 முதல் வேலை நிறுத்தம் நடத்தியபோது டெஸ்மா சட்டம் பாய்ந்தது.

பொதுச் செயலாளர் ஆ.செல்வம் சங்கம் கடந்து வந்த பாதை 2003 போராட்டம் எதிர்கால இயக்க நடவடிக்கைகள் பற்றி பேசினார்.மாநிலத் தலைவர் மு.அன்பரசு அவர்கள் 2013ல் வாங்கிய இடத்தில் எம். ஆர்.அப்பன் பயிற்சி மையம் கட்ட எடுத்த முயற்சிகள், அவசியம் ஆகியவற்றையும், டெல்லியில் ஆட்சி மாற்றத்தையும் பழைய ஓய்வூதியம் உள்ளிட்ட நிலுவை கோரிக்கைகளை வென்றெடுக்க களம் காண அறைகூவல் விடுத்தார்.

இறுதியாக சிறப்புரையாற்றிய சிஐடியு தமிழ் மாநிலத் தலைவர் அ.சவுந்தரராசன்

பேசும் போது உழைப்பாளி வர்க்கத்தின் சிப்பாய்களை உருவாக்கிட எம்.ஆர்.ஏ பயிற்சி மையம் அமைக்கப்பட வேண்டும் எனவும், ஒன்றுபட்ட போராட்டத்தை முன்னெடுத்து சங்க உரிமை,வாழ்வாதார உரிமைகளை மீட்டு எடுப்போம் என ஆற்றிய உரை சிறப்பாக இருந்தது.இந்த நிகழ்ச்சியின் துவக்கம் முதல் முடியும் வரை பல மாவட்டங்களில் வந்த ஆண் பெண் தோழர்கள் ஒருவர் கூட கலையாமல் உற்சாக வெள்ளத்தில் உணர்வு பூர்வமாக பங்கேற்றது. முக்கியமான அம்சமாக இருந்தது.

2003 போராட்டத்தில் முன்னணித் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். அரசு ஊழியர் குடும்பங்கள் வசித்த குடியிருப்புகள் காலி செய்ய சொன்னார்கள். பெண்கள் மீது விபச்சார வழக்கு போட மிரட்டினார்கள். FIR போடப்பட்டது. தலைமைச் செயலகத்தை பல மாத காலம் ஊழியர்கள் இல்லாமல் நிர்வாகம் நடத்தினார்கள். ஒரே நாளில் 1.76 இலட்சம் பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டனர். வீதி மன்றத்திலும் நீதி மன்றத்திலும் போராடி அனைவரையும் பாதுகாத்தோம். பணியில் இணையும் வரை ஊழியர்களை ஆற்றுப்படுத்தினோம். குடும்பங்களை பாதுகாக்க ஊதியம் அளித்தோம். அத்தனையும் மீறி அரசியல் மாற்றத்திற்கு வித்திட்டோம் உண்மையிலேயே நாம் வரலாற்றுப்படை என்பதை நிரூபித்துள்ளோம்.இப்படி பல போராட்ட நினைவலைகளை இந்த நிகழ்ச்சி என்னைப் போன்றோருக்கு நினைவுபடுத்தியது.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய இயக்கத்தின் முன்னோடிகள் நெல. இல.சீதரன், அ.இராஜா, வி.தேவன், என். இளங்கோ, வி.கணபதி, எம்.தங்கராஜ் ஆகியோரது உரை வரலாற்றுப்படையின் வரலாற்றுச்சுவடுகளை நினைவுபடுத்தின. பொதுச்செயலாளரும் உருவாக்கிட தயாராகி விட்டார்கள் என்பதை உணர்த்துவதாக இருந்தது.

2013ல் வாங்கப்பட்ட இடத்தில் கொடி மரம், கல்வெட்டு அமைத்து எம்.ஆர்.ஏ. பயிற்சி மையம் கட்டுவது என்பதும் ஒரு வரலாறுதான். எந்த நோக்கத்திற்காக இந்த இடம் வாங்கப்பட்டதோ அந்த இடத்தில் பயிற்சி மையம் கட்டுவது மறைந்த முன்னாள் தநாஅஊச-அ.இ.மா.அ.ஊ.ச பொதுச்செயலாளர் தோழர்.இரா.முத்து சுந்தரம் அவர்களின் கனவு நனவானதாக நினைக்கிறேன். இந்தியா முழுவதும் சுற்றி 2003 போராட்டத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்காக பாதுகாப்பு நிதி திரட்டியவரும், பழைய ஓய்வூதியத்தை பெறுவதற்காக இந்தியா முழுவதும் பயணித்து அதற்கான போராட்டங்களுக்கு ஊழியர்களை அணி திரட்டிய ஆசான் இரா. முத்துசுந்தரம் அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்துவதாக இருந்தது.

வரலாற்றுப்படையின் புதிய வரலாறு படைக்க இளைய தலைமுறைக்கு அறை கூவல் விடும் நிகழ்வாக இந்த எழுச்சிநாள் 20ஆண்டு நிறைவு (ம) மாணிக்க ஆண்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

●

உழைத்து வாழும் உலகின்
விசையாக
ஒடுக்கப்பட்டவர்களின்
விடுதலை திசையாக
புவியின் இதயமாக
துடித்தது புரட்சி!
தான் அமைந்த
காரணம் கண்டதில்
பூமிக்கே மகிழ்ச்சி!

# அன்பால் அல்ல அனுபவத்தால் மட்டுமே புரிந்துகொள்ளக் கூடியவர் அப்பா!



மாநில தலைவர் மு.அன்பரசு அவர்களின் தந்தை திரு.முத்துவிஜயன் அவர்களின் திருவுருவ படத்திறப்பு

கையில் ஏந்தி,
தோள்களில் சுமந்து,
தான் காணா உயரங்களை
நாம்காண ஆவல் கொண்டவர்
அப்பா!
தரை மீது நம் பாதம்படக்
கூடாதென
தோள் மீது நமை சுமந்து,
புது உலகை நமக்கு காட்டி
நம்மை புத்தம் புதிதாய்
ஆக்கியவர் அப்பா!
பலரது வாழ்வில் கடைசி வரை
விளங்கிக்கொள்ள
முடியாத புத்தகம் அப்பா...!

அப்பாவின் தோளில் ஏறி
சாமியை பார்க்கும் போது
தெரியவில்லை
சாமியின் தோள் மீது தான் ஏறி
இருக்கிறேன் என்று!
கண்களில் கோபத்தையும்
இதயத்தில் பாசத்தையும்
வைத்திருந்த ஒரே உறவு...
தந்தை மட்டுமே...!

எந்த பெண்ணும்
அவள் கணவனுக்கு
ராணியாக இல்லாமல்
இருக்கலாம்
ஆனால் நிச்சயம் அவள்
தந்தைக்கு
இளவரசியாகவே
இருக்கிறாள்..!

தனக்கு கிடைக்காத அனைத்து
சந்தோஷங்களும்
தன் குழந்தைகளுக்கு கிடைக்க
வேண்டும் என்று
நினைத்து வாழும் உயிர் தான்
அப்பா!

ஆயிரம் மடங்கு அன்பை
உள்ளே வைத்து கொண்டு
எதிரியை போல் நடமாடும் ஓர்
உயிர் அப்பா!!!!
எட்டி உதைத்த கால்களை
கட்டி அணைத்து முத்தமிட்டு
வாழ்க்கைச் சக்கரத்தில் நாம்
வசதியாக வாழ்வதற்காக
ஓயாமல் சுழலும் அன்பு
சக்கரம்.

நாம் எழுமுன் வேலைக்கு
சென்று,
நாம் தூங்கிய பின்பு வீடு
திரும்பும்
தன்னலமில்லா உள்ளம்
அப்பாவின் உள்ளம்.
தந்தை என்பவர்
ஆயிரம் ஆசான்களுக்கு சமம்.
அப்பாவின் கைப்பிடித்து
நடக்கும்
அனுபவம் கோடி ரூபாய்க்கும்
ஈடாகாது!

அப்பாவை இழந்த ஒவ்வொரு
மகனும் அனாதைதான்
எத்தனை வயது
ஆகியிருந்தாலும்.
இறந்துபோனஅப்பாக்கள்
அனைவருக்கும் சமர்ப்பணம்!

# வங்கித் துறையை தனியார் மயமாக்கும் நடவடிக்கை

**– இரா.மங்களபாண்டியன்**

இந்திய தேசத்தில் 'கடன் வாங்கிவிட்டு திருப்பிச் செலுத்தாதவர்கள் என்பவர்கள் 'செயல்படா சொத்துக்கள் வைத்திருப்பவர்கள்" (*Non Performing Assets*) என்று மிகவும் மரியாதையான பெயரில் அழைக்கப்படுகிறார்கள். லாபம் உருவாக்காத - நட்டமான செத்துக்கள் உடையவர்கள் (*Stressed Assets*) என்றும், 'ஒத்துழைக்காத கடன்காரர்கள்" (*Non Cooperative Borrowers*) என்றும் அவர்கள் சற்று கவுரவமாக அழைக்கப்படுகிறார்கள். வங்கிகளின் பணத்தைத் திருடுபவர்களுக்கு 'முதலீட்டாளர்கள்" என்ற பெயரில் இப்படி மிகவும் மரியாதை அளிக்கப்பட்டு வருகிறது. இவர்கள் கொள்ளையடித்துள்ள பணம் என்பது நாட்டு மக்களிடமிருந்து வரியாகப் பெற்ற பணமாகும்.

நிதி ஆயோக்கின் தலைமை நிர்வாக அலுவலர், பொழுதுபோய் பொழுது விடிந்தால், ஊடகங்களிடம், நாட்டிலுள்ள அனைத்தும் தனியாரிடம் தாரை வார்க்கப்பட வேண்டும் என்று உச்சரித்துக் கொண்டிருக்கிறார். இந்தப் பின்னணியில்தான் அரசாங்கத்தின் உண்மையான நோக்கம் குறித்து ஏராளமான சந்தேகங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

வங்கிகள் மறுபடியும் தனியாரிடமே தாரை வார்க்கப்படவேண்டும் என்று இந்தி ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநரும் அப்போது உச்சரிப்பதைப் பார்த்தால் இத்தகைய சந்தேகங்கள் உண்மையாக இருக்குமோ என்றே நினைக்கத் தோன்றுகிறது.

இந்தப்பின்னணியில்தான் 'வங்கிகள் முறைப்படுத்தல்" என்ற பெயரிலான இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றுவதற்கு முன்பு. பல்வேறு சந்தேகங்களை தெளிவுபடுத்த வேண்டியது இந்த அரசாங்கத்தின் கடமையாகும்.

இந்த சட்டமுன்வடிவில் வங்கிகளில் கடன் வாங்கிவிட்டு, திருப்பிச் செலுத்தாதவர்கள் மீது இந்திய ரிசர்வ் வங்கி மூலமாக நடவடிக்கை எடுத்திட, அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கப்பட வேண்டிய நடவடிக்கையாகும். நாட்டில் வங்கிகளில் கடன் வாங்கிவிட்டு அவற்றைத் திருப்பிச் செலுத்தாததன் மூலம் அதிகரித்துள்ள 'செயல்படா செத்து வைத்திருப்போர்" அதாவது, வாராக்கடன் வைத்திருப்போரின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்பது குறித்து தொடர்ந்து பேசப்பட்டு வந்திருக்கிறது.

வங்கிகளில் பணத்தை வாங்கிக் கொண்டு திருப்பிச் செலுத்தாததவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள். நடவடிக்கை எடுப்பதில் அரசு தாமதித்துவிட்டது என்று நிதி அமைச்சரும் கூறியிருக்கிறார். எனவே இந்தச் சட்டத்தை நிறைவேற்றுங்கள். ஆனால் கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் மீது எவ்விதத்தில் நடவடிக்கை எடுக்கப்போகிறது இந்த அரசு என்பது

தான் கேள்வி. இந்திய ரிசர்வ் வங்கி மூலமாக, ‘செயல்படா சொத்துக்கள் வைத்திருப்போரை” கத்தரித்துவிட வேண்டும் என்று அரசாங்கம் கூறியிருக்கிறது. இதன் பொருள் என்னவென்றால், இவர்கள் வாங்கிய கடன்களைத் தள்ளுபடி செய்திட வேண்டும் என்பதேயாகும்.

ஏற்கனவே, கணிசமான அளவிற்கு இவர்கள் வாங்கிய கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டன. இவை யாருடைய பணம்? வங்கிகளில் உள்ள மக்களின் சேமிப்புப் பணமாகும். சுமார் 3 லட்சம் கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இன்னும் தள்ளுபடி செய்திட வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் இப்போது கூறிக்கொண்டிருக்கிறார்.

எல்லாம் செய்து விட்டு, இன்னும் ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவர உள்ளவார்கள். எர்ஆர்டிஐ என்னும் நிதித் தீர்மானம் மற்றும் சேமிப்புக் காப்பீட்டுத் சட்டமுன்வடிவு (FRDI Bill –Financial Resolution and Deposit Insurance Bill) என்று அதற்குப் பெயர். இதன்கீழ் அமைக்கப்படும் தீர்வாய வாரியத்திற்கு வங்கிகளை ஒழித்துக்கட்டக்கூடிய அளவிற்கு ஏராளமான அதிகாரங்களை வழங்கி உள்ளனர்.

ஒருபக்கம் வராக்கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டாம் என்று சொல்லி தள்ளுபடி மறுபக்கம், அதனால் நஷ்டம் அடைந்த வங்கிகளை ஒழித்துக்கட்ட வேண்டும். கடன்களைப் பெற்றுக்கொண்டு திருப்பிச் செலுத்தாதவர்களால் பாதிக்கப்படுவது வங்கிகளேயாகும். கடன் பெற்றவர்களிடமிருந்து பணத்தைத் திரும்பப் பெற வேண்டுமானால் அதற்கு தேவையான அதிகாரங்களை வங்கிகளுக்கு அளித்திட வேண்டும். வங்கிகள் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ்க செயல்பட வேண்டுமா? அல்லது இந்திய ரிசர்வ் வங்கி அவ்வப்போது இடும் கட்டளைகளின்படி செயல்பட வேண்டுமா?

வங்கிகளில் பணம் பெற்றுக்கொண்டு திருப்பிச் செலுத்தாத 12 கம்பெனிகளின் பெயர்கள் மட்டுமே தற்போது பகிரங்கமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இக்கம்பெனிகள் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை 2.53 லட்சம் கோடி ரூபாய். நாட்டின் மொத்தம் வங்கிகளில் பணம வாங்கிக் கொண்டு திருப்பிச் செலுத்தாத - வராக்கடன் தொகையில் - இது 25 சதவீதத்திற்கும் குறைவு என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதனை அரசாங்கமும் ஒப்புக்கொண்டிருக்கிறது.

வங்கிகளிடம் கடன்பெற்றுக் கொண்டு திருப்பிச் செலுத்தாமல் இருக்கும் ஏமாற்றிக் கொண்டிருப்பவர்களில் 80 சதவீதத்தினர் நாட்டிலுள்ள 50 கம்பெனிகளுக்குச் சொந்தமானவர்களாவார்கள். இந்த 50 கம்பெனிகளின் மீது எவ்வித நடவடிக்கையும் கிடையாது. இவர்கள் அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது அமைச்சர்களுடன் செல்பவர்கள் தான். இத்தகைய வெளிநாட்டுப் பயணங்கள்தான் இஸ்ரேலிலும், இதர நாடுகளிலும் உள்ள தனியார் நிறுவனங்களுடன் சேர வகை செய்து கொண்டிருக்கிறது. இவ்வாறு ஏராளமான சந்தேகங்கள் எழுந்துள்ளன. எனவே, வங்கிகளில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளுக்கு தனியார்மயம் தீர்வாகாது.

வங்கிகள் மட்டுமல்ல, பல பொதுத்துறை நிறுவனங்களையும்கூட தனியாரிடம் தாரை வார்த்திட குறி வைக்கப்பட்டிருக்கின்றன. மின்சாரத்துறை கூட ‘செயல்படா சொத்து வைத்திருப்பவர்களால்” பாதிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் கூறுகிறார். உருக்குத்துறை நெருக்கடியில்தான் இருக்கிறது. எனினும், எந்தவொரு

பொதுத்துறை உருக்கு நிறுவனமும் தாங்கள் வங்கிகளில் வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்தாமல் இருந்ததில்லை. ‘செயில்;’ (SAIL – Steel Authority of India Limited) நிறுவனத்தில் 4 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. எனினும் அது வங்கிகளிடம் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தாமல் இருந்ததில்லை.

ஏர் இந்தியா நிறுவனம் தனியாரிடம் தாரை வார்த்திடப்பட்டுவிட்டது. எனினும் இதுநான் வரையிலும், வங்கிகளிடம் வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்தாமல் ஏர் இந்தியா காலம் கடத்தியதில்லை. கடன் பெற்றவர்களிடமிருந்து அதனை வசூல் செய்வதற்கு தேவையான அதிகாரங்களை வங்கிகளுக்கு அளிக்கும் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டுள்ளது. அதனை வரவேற்கும் அதே சமயத்தில், இதில் இடையே இந்திய ரிசர்வ் வங்கி எதற்கு என்ற கேள்வியை முன்வைக்கிறோம்.

இந்திய ரிசர்வ் வங்கி என்பது வங்கிகளின் செயல்பாடுகளை முறைப்படுத்தும் ஒன்று. அது வங்கிகளுக்கு சேவை செய்வது அல்ல. வங்கிகள் அனைத்தும் அரசாங்கத்திற்குச் சொந்தமானவை. அரசாங்கம் வங்கிகளுக்குக் கட்டளையிடலாம். இதன்மூலம்தான் கடன்களைத் திரும்பப்பெறுவது விரைவில் சாத்தியமாகும். இடையில் மற்றோர் அமைப்பு வரும்போது. சந்தேகங்கள் அதிகமாகின்றன. ரிசர்வ் வங்கி நிர்வாகம், வங்கிகள் அனைத்தையும் தனியாரிடம் தாரை வார்த்திட வேண்டும் என்று நாள்தோறும் கூறிக் கொண்டிருக்கிறது.

இந்திய ரிசர்வ் வங்கி, இதர வங்கிகளை மேற்பார்வையிடலாம், முறைப்படுத்தலாம், ஆனால் கட்டளை பிறப்பிக்கக்கூடாது என்ற திருத்தத்தை பரிசீலித்திட வேண்டும். கடன்களைப் பெற்றுக்கொண்டு திருப்பிச் செலுத்தாத கம்பெனிகள் 50. இவற்றில் 12 கம்பெனிகள் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்குமாறு அது கட்டளையிட்டிருக்கிறது. மீதம் உள்ள 38 கம்பெனிகள் சுதந்திரமாக விடப்பட்டிருக்கின்றன. அந்த 38 கம்பெனிகளுக்கும் கடன் கொடுத்த வங்கிகளின் கதி என்னாவது? அவை நட்டத்தில் இயங்குவதாகக் கூறி அவற்றைத் தனியாருக்கு தாரைவார்த்திட வேண்டும் என்பதுதான் நோக்கம். கடன்களை வங்கிகளிடம் பெற்றுவிட்டு திருப்பித்தராத 50 கம்பெனிகளின் பெயர்களையும் பொது வெளியில் தெரியப்படுத்த வேண்டும். இதில் முக்கியமான அம்சம் என்னவென்றால், பெரிய கம்பெனிகள் பல்வேறு பெயர்களில் இயங்குகின்றன. அதில் ஒரு பெயரில் அது ‘செயல்படா சொத்து வைத்திருப்பவர்’’ என்று முத்திரைகுத்தப்பட்டால், வேறு பெயர்களில் உள்ள நிறுவனங்களின் மூலமாக வங்கிகளில் கடன்களைப் பெறுவார்கள். அவர்கள் வங்கிகளிடம் கடன் வாங்கி ஏமாற்றுவது நிற்காமல் தொடரும். எனவே, 50 கம்பெனிகளின் பெயர்களையும் வெளியிட வேண்டும். விஷயங்களை மக்கள் தெரிந்துகொள்ளட்டும். வங்கிகளுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும். இடையில் இந்திய ரிசர்வ் வங்கி வேண்டியது இல்லை. இதன் மூலம் பெரிய நிறுவனங்கள் பெற்ற கடன்களை குறைந்தபட்சமாவது திரும்ப பெற முடியும். ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com